40

REGISTERED No. M. 6165.

அணு 2

40
3-13
4 JUL 1953

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜுலை 1953.

விஷயம்.		பக்கம்.
மானில வாழ்வு	(மௌலவி யாகூபு மஃதனிய்யி)	1
தெய்விகக் காதல்	(தொடர் கதை) (மாஸ்டர் கமல் பாபு)	3
போர்க்களத்திலே பெருமானார்	(மௌலவி ... சாந்திதாஸம்)	11
ரோஸாவின் ...	(தொடர் கதை)	14
பழம் பாயாசம்	(மாதர் பகுதி)	30
விகடத் துண்டுகள்		31

... இஸ்லாம் ஆபீஸ்:
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3.L
Q7ↁ211, N24F1
N53
187021

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு		
	வருஷ சந்தா	ரூ. 1-8-0
	தனிப் பிரதி	அண. 2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா		ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

வெளிவந்து விட்டது! புதிய பதிப்பு!

இரத்தின விலாசம்
நஸீஹத்துலாசம்.

அல்லாஹ், றஸூலைக் கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்யவேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும் ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீரவேண்டிய கிதாபு. தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும்.

சுத்தத் தமிழ் விலை ரூ. 1-8-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

☪

பத்ஹுல் இஸ்லாம்

ஜூலை—1953.

மானில வாழ்வு.

(மௌல்வி யாகூபு மஃதலிய்யி)

சகல புகழும் புகழ்ச்சியும் அல்லாஹு தஆலா ஒருவனுக்கே உரியதாக இருக்கிறது. அவனே சகல வஸ்துக்களையும் எறும்பு முதல் யானைவரை எண்பத்தினான்கு நூறாயிரம் ஜீவஜந்துக்களையும் படைத்து அததுகளின் தராதரப்படி இரணபலித்து காப்பாற்றி வருகிறான். சகல கருணையும் ஈடேற்றமும் கடைசி நபியாகிய முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் பேரில் உண்டாவதாக.

அன்புமிக்க நண்பர்களே! இவ்வுலகம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுதலடைவதையும், இரவுபோய் பகல், பகல்போய் இரவு, நிலவு போய்இருள், இருள்போய் நிலவு, வெயில்போய் குளிர், குளிர்போய் வெயில் ஆகமாறி மாறி வருவதையும் நாம் கண்முன்பாகவே பார்த்து வருகிறோம். இருந்தும் இவைகளுள் நமக்கு எந்த உணர்ச்சியும் உண்டாவதில்லை; காரணம்? இவைகளின்பக்கம் நம் சிந்தனை செல்லுவதில்லை. இத்தனை மாறுதல்கள் ஏன் ஆகின்றன, யாரால் ஆகின்றன. இன்றைக்குள்ள சரீரசுகம் திடகாத்திரம் உள்ள பலசாலிகள் திடீரென்று நாளைக்கு கைகால்சோர்ந்து மூர்ச்சையாகி மண்ணுக்குள் போய் மறைவது ஏன்? செல்வமும் சிறப்பும் ஒருங்கே பெற்றிருக்கும் சீமான்கள் தங்கள் முன்பாகவரும் எந்த ஆபத்தையும் பணத்தினாலோ பலத்தினாலோ தட்டிக் கொள்ளக்கூடிய சக்திவாய்ந்த மஹான்கள் (மலகுல் மௌத்) எமனுடைய பிடிக்கு கை ஈந்தாற்போல் ஆகிவிடுகிறார்களே ஏன்? இதன் இரகசியம் என்ன? இவ்வுலகம் இன்றுநேற்று உற்பத்தியானதா? இதில் மனிதர்களும் வெளிவந்ததில் நாம்தான் மூத்தவர்

களா? இல்லை இல்லை. இவ்வுலகம் ஏற்பட்டு எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இதில் எத்தனையோ கோடிமக்கள்கள் வந்து சென்றுவிட்டனர். இவர்களில் அரசர்கள் எத்தனை ஆண்டிகள் எத்தனை தனவந்தர்கள் எத்தனை பிச்சைக்காரர்கள் எத்தனை வீரர்கள் எத்தனை சோம்பேரிகள் எத்தனை? ஆக ஒருவராகிலும் இவ்வுலகில் தங்கினார்களா? இல்லை இல்லை எல்லாம்போகுமிடம் சொல்லாமல் ஒருவருக்குப்பின் மற்றவராக போய் மறைந்து விட்டார்களே யல்லாது ஒருவராகிலும் இங்கே தங்கியிருக்கவில்லை என்றால் இதைப்பற்றி நாம் என்ன சொல்லுவது.

பசியாலும் நோயினாலும் பீடிக்கப்பட்ட ஒரு சிலரைப்பற்றி பேசுவதற்கில்லை. ஆனால் செல்வமும் சரீரதிடகாத்திரமும் உள்ள ஒருவன் தன்னுடைய சகல சௌகரியங்களையும் ஒருங்கே விட்டுவிட்டு, தனக்கொன்றும் தெரியாதென்றும் தன்னுடைய கைகால்களை நீட்டியவனாகவும் கண், வாய்களை பொத்தினவனாகவும் கிடந்துவிடுகிறான்; அருமையாக தேடப்பட்ட அவனுடைய பொருள்கள் அலங்கோலப்பட்டுபோகுது; அன்புடன் வளர்க்கப்பட்ட அவனுடைய பிள்ளைகள் ஆதரிப்பாரன்றி அலைகிறார்கள்; ஆசைக்கண்ணாட்டியாக இருந்த அவன் மனைவியை அடுத்தவீட்டான் அடைகிறான் என்றால் இவைகளெல்லாம் யாரால் ஆகின்றன. ஒவ்வொன்றும் தான் தானே ஆகின்றனவா? அல்லது ஒருசக்தி இடையில் இருந்து ஆக்கிக்கொண்டிருக்கிறதா? அன்பர்களே சிந்தித்துப் பாருங்கள். டிறைவர் இல்லாமல் வண்டி ஓடாது; விதைபோடாமல் மரம் முளைக்காது. இந்த திட்டத்தின்படி உலகத்தில் உள்ள சகல வஸ்துக்களும் மகா வல்லவனாகிய அல்லாஹு தஆலா ஒருவனுடைய சக்திற்குக் கீழ்ப்பட்டதாகவே இருக்கின்றன; அவனைக்கொண்டே உண்டாகின்றன; அவனுடைய கெடுவுவரையில் வாழ்கின்றன. கெடுவு முடிந்து அவன் கூப்பிடுங்காலத்தில் ஒரு நொடிபொழுது முந்தாமலும் பிந்தாமலும் போய் சேருகின்றன. இவைகளை ஆழ்ந்த கருத்துடன் யோசித்த பெரிய மஹான்கள் இந்த நிலையற்ற வாழ்க்கையின் இன்பத்தை வெறுத்து, என்றும் அழியாத இன்பமும் மாறாத மறு உலகவாழ்க்கை வேண்டி மன்னவன் கட்டளைக்கிசைந்து மார்க்க முறையை தெரிந்து மானிலவாழ்க்கையை கழித்தார்கள் அவ்வாறே அறிவாளிகளாகிய நாமும் நம் நிலையை உணர்ந்து இதற்கப்பால் வரும் நீண்டநாள வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களை இங்கேயே தயார்செய்து கொண்டு அல்லாவின் [illegible]த்தைத் தேடிக்கொள்வதே முக்கிய கடமை.

187021
சென்னை-600 008.

தெய்வீகக் காதல்.

(மாஸ்டர் கமல் பாபு)

(தொடர் கதை 6-வது பகுதி)

என் கழுத்தில் ஒருவித செள செள ஆனது. சிந்தனையை கலைத்து மின்சார ஸ்விட்ச் போட்டு பார்த்தேன ஒன்றுமில்லை. தலையணை தான் நனைந்திருந்தது. ஆ! தினம் நான இவ்வளவு கண்ணீரா வடிக்கிறேன்? ஆம், காதலியின் கண்ணீரால கல்லை ஆகாவிட்டாலும் சிறுகால்வாய் ஆகுவது நிச்சயம்! இர்ஷாத் சொன்னது உண்மை என்று அப்போதுதான் உணர்ந்தேன. இனி எதையும் நினைக்காமல் நிம்மதியாக தூங்கலாமென்று விளக்கை அவிழ்த்து விட்டு மீண்டும்படுத்தேன்.

எவ்வளவுதான் புரண்டு படுத்தாலும் 'உன் மனதிற்கு அமைதி அளிக்கக்கூடிய பொருள் உலகத்தில் ஒன்றுமில்லை. ஆகவே, ஆலமடங்களுக்கும் அமைதி தரக்கூடிய அன்பே உருவான அந்த அல்லாவினிடத்திலேயே அமைதியை நாடு' என்ற அசரீரி சப்தம்போல, "அல்லாஹு அக்பர்" என்று பஜர் பாங்கு வீரத்தோடும் கம்பீரத்தோடும் அழியா புகழ்பெற்ற ஆர்வத்தோடும் ஒலித்தது. பஜர் நேரத்தில் கேட்கும் துஆ அல்லா இடத்தில் கபூல் ஆகுமென்பதை அறிந்த நான், தொழுகைகளை முடித்துக் கொண்டு 'அன்னையைவிட எழுபதுபங்கு அதிக அன்பு கொண்டுள்ள ஆண்டவனே! நான் ரஜாக்பாஷாமீது கொண்டுள்ள காதல் உண்மையானல் உன் குத்ரத்தென்னும் கோர்வை கிருபையால் அவருக்கே நான் மனைவியாகும்படி மனமிரங்கி அருளவேண்டும். இல்லையேல், கருணைகொண்டு என்னை உன்னிடத்தில் கூப்பிட்டுக் கொள்' என்று கண்ணீர்விட்டுக் கதறிக் கேட்டேன். ஆண்டவனிடத்தில் மரணத்தைக் கேட்பது மகாபாபம் என்பதை அறிந்தும், ஏனோ அவ்வார்த்தை வெளிவந்துவிட்டது. என் தலையிலிருந்த ஏதோ ஒரு பெரியசுமையை ஆண்டவனிடத்தில் ஒப்படைத்துவிட்டதாக எனக்குச் சற்று நிம்மதி ஏற்பட்டது.

இன்றும் மைதுனர் ஏதாவது கலகம் செய்வாரென்று அறிந்தே, ரவுனக்குன்னிஸாவை அனுப்பி நூர்ஜஹானை அழைத்து வரச்சொன்னேன். அன்னியும் மறுக்காமல் அவசரமாக வந்துவிட்டான். நான் எதிர்பார்த்தபடியே அன்று மைத்துனர் அப்துல் [illegible] என்னை கூப்பிட்டு,

"சும்மா ரஜாக்பாக்ஷாவைதான் மணம் செய்துகொள்வேன் என்கிறாயே. நீபடித்தபெண்ணு எவ்வளவு அடக்க ஒடுக்கமா......"

"அடக்க ஒடுக்கமா இல்லாமே யாரிடம் போய் ஆடினாள்?" நூர்ஜஹான் குறுக்கிட்டு கேட்டாள்.

"அது இல்லேம்மா, அதே புருஷன் வேண்டுமென்று எந்த பெண்ணாவது கேட்டிருக்கிறாளா?"

"ஏன இல்லை? எத்தனையோ பெண்கள் வாதாடி இருக்கிறார்கள். உங்களுக்கு தெரியவில்லை என்றால் யாரும கேட்டதில்லை என்ற அர்த்தமா?"

"பார்த்தாயா மாமீ! உங்கமருமகள் பேசும் பேச்சை! பெண்களை படிக்கவைக்க கூடாதென்று பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள்" அப்துல் ரஷீத் எங்க அம்மாஇடம சொன்னார். படித்த பெண்களோடு பேச முடியாதென்ற பயமோ என்னமோ அம்மா பேசாமல் அசந்து உட்கார்ந்திருந்தாள்.

"சொன்ன பெரியவர்களும் உங்கள்மாதிரிதான் இருப்பார்கள். அறிவுள்ளவர்கள் யாரும் பெண்களுக்கு படிபபு அவசியமில்லை என்று சொல்லமாட்டார்கள்" நூர்ஜஹான் விடாமல் சொன்னாள்.

"கேட்டியாடி உன் அண்ணி சொன்னதை! எனக்கு அறிவில்லையாம், உனக்காகிலும இருக்கிறதா?" தன் மனைவியை நோக்கி அப்துல் ரஷீத் கேட்டார்.

"எனக்கு அறிவு இருந்தால் என் ஆபரணங்கள் எல்லாம் மார்வாரி கடையில் போய் மங்குமா?" சஜ்முன்னிஸா ஆணித்தரமாக பதில் கேட்டாள்.

"பட்டுக்கோட்டைக்கு பாதை கேட்டால் கொட்டை பாக்கு துட்டுக்கு எட்டு என்பதுபோல நான் அறிவைப்பற்றி கேட்டால் ஆபரணம் போகுமா என்கிறாயே"

"இப்போ அந்த அறிவுக்கும் ஆபரணத்திற்கும்தானே போர் நடக்கிறது. ரஜாக்பாக்ஷாவும் அறுபது சவரத்தில் ஹார் செய்து போட்டால் இந்த வாதம் வளர வழி இருக்குமா? அது இல்லை என்றுதானே தன் அறிவையும் அடகுவைத்து வாதம் புரிகிறீர்கள்" அக்கா சொன்னாள்.

"நீங்க பேசுவதைப்பார்த்தால் வியப்பாகதானே இருக்கிறது" மைதுனா சொன்னார்.

"வியப்பாக என்னா? விவரிக்கமுடியாத வியப்பென்று சொல்லுங்களேன். வியப்புடன் பேசவானேன், மற்றொன்று கூட்டிசொன்ன

மறந்து விட்டீரோ? அல்லது இதுவரையில் சொன்ன வேகத்தில் விட்டு விட்டீரோ? சொல்லியே இருப்போமென்று நினைத்து விட்டீரோ? இல்லை அதை சொல்வானேனென்று சொல்லாது விட்டீரோ? இஷ்டமில்லாமலே விட்டு விட்டீரோ? அல்லது வெளியிட்டால் யாது விளையுமென்று விட்டீரோ? உமது மடமையை காட்டிவிடுமென்று விட்டீரோ? இவளை படித்தவர்களிடம் சொன்னால் பயனளிக்காது என்று விட்டீரோ? எதற்காக விட்டு விட்டீர்கள்?" அன்னி கொஞ்சமும் தயங்காமல் சொல்லிக்கொண்டே போனாள். இவள் தீ பொறிக்க பேசுவதைபார்த்து என்ன விபரீதம் நடக்குமோ என்று என்மனதில திகில் குடிக்கொண்டது.

"நூர்ஜஹான், நீ எவ்வளவு சமத்து என்று இன்றுதான் அறிந்தேன். கோட்டைக்கொடுத்து சில்லறை வாங்கினமாதிரி ஒரு நிமிஷத்தில் விட்டீரோ விட்டீரோ என்று எவ்வளவு கொட்டினை. அம்பட்டன் கத்தி எவ்வளவுதான் கூர்மையாக இருந்தாலும் அதில் ரோமமேதான் எடுக்கமுடியுமே ஒழியே மாங்காயறுக்க முடியாது. அதுபோலே நீ எவ்வளவுதான் படித்து பெருமை கொண்டிருந்தாலும் பெண் என்பதை மறவாதே அதிலும் இந்த பஞ்சாயத்தில் உன்னை யார் கூப்பிட்டார்கள். வாயுக்கு வந்ததை எல்லாம் உளருவதற்கோ?" அப்துல்ரஷீத அர்த்தமற்ற கேள்வியைபாட்டி மொழியும் கலந்துசொன்னார். கோபத்தினால் அவர் கண்கள் சிவந்திருந்தன

"நீங்கதான் போக்கு தெரியாமல் பேசுகிறீர் அவள் நீதியாகதான் பேசுகிறாள். நீங்கள் வீட்டுக்கு மருமகன் என்றால் அவள் வீட்டுக்கு மருமகள் அதிலும் இந்தவீட்டில் அவளுக்கு இருக்கும் உரிமை மெக்கில்லை என்பதை அறிந்து பேசுங்கள்" நீசியும் நேர்மையும் கூர்மையும் கலந்து கூறினாள் அக்கா ரஜ்முன்னிஸா.

"ரஷீத்பா, அவர்களுடன் பேசுவதைவிட ஹபீபை கூப்பிட்டு கேளேன், என்ன சொல்லுகிறான்" என்று விளைவு விபரீதமாகாதபடி இதுவரை பொறுமையாக இருந்த அம்மா தன் மருமகனை நோக்கி சொன்னாள்.

"ஹபீப், ரஜாக்பாஷா இடம் என்ன இருக்கிறது அவனே வேண்டுமென்கிறாய" அம்மாவின் பேச்சை ஆமோதித்து மைத்துனர் என்னை கேட்டார்.

அவரிடம் பேச எனக்கு வெட்கமும் பயமும் இருந்ததென்றாலும், தலைமேல் போனவெள்ளம் ஜாணபோனால் என்ன முழும் போனால் என்ன? மேலும், எனக்கு பக்கபலமாக அக்காவும் அன்னியும் இருக்கிறதினால், தயக்கமின்றி தாராளமாக சொன்னேன்.

"பங்காளிகளாலும், பகைவர்களாலும், கள்ளர்களாலும், காவலர்களாலும், கவரமுடியாததும் கானலால்வேகாததும், புயலால் போகாததும், புலவர்கள் போற்றத்தக்கதும் மன்னர்கள் வழுக்கத் தக்கதும், மாதவத்தோர் வாழ்த்தத்தக்கதும், எவர்கொள்ளை யிட்டாலும் குறையாததும், யாருக்கு அளித்தாலும் அழியாது அபிவிர்த்தியாய் தழைத் தோங்குவதும், அருட்செல்வம் தருவதும், அழியாப் புகழளிப்பதும், பெருமையாக வாழ செய்வதும் கல்வி செல்வமென்ற பகுத்தறிவின் பொக்கிஷமும், தலைவணங்காததும் தகர்க்க முடியாததும், அடிமை தனமில்லாததும், அழிவு இல்லாததுமான அன்பின் ஆபரணங்களும், கடலுக்கும் பெரியதாக புகழக்கூடியதும் போற்றதக்கதுமான பொறுமை போஜனமும் அவரிடமிருக்கிறது. அழியக் கூடிய இவ்வுலகில் நான் தேடுவது இந்த மூன்று அழியா ஆஸ்திகளே"

"ரஜாக்பாஷா உன்னை பார்த்திருக்கிறாரா?"

"இல்லை, நான் அவரை பார்த்திருக்கிறேன்"

"சரிதாம்மா உன் இஷ்டமதுவானால் நான் ஏன் இடையூறாக இருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு 'இன்னும் கேட்கிறவர்களை கேட்டு காரியத்தை முடிமாமீ' என்று அம்மாவுக்கு சொல்லிய படி போய்விட்டார்.

அன்று என் அப்பாவுக்கும், பெரிய மாமூவுக்கும் தமையன்மார் இருவருக்கும் சிறிய மைதுனருக்கும் என் கல்யாண செய்தியை கடிதமென்ற காற்று மாரலாய் தூது அனுப்பினார்கள். மாமியார் வீட்டுக்கு சென்றிருந்த என் சிறிய அக்கா கமலுன்னிஸாவும் தாய் வீட்டிற்கு சென்றிருந்த பெரிய அன்னி உம்மஸல்மாவும் அன்று வந்தார்கள். வந்த அக்காவுக்கும் அன்னிக்கும் நூர்ஜஹான் விஷயத்தை விளக்கமாக சொன்னாள். இதை பக்கத்தில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஜன்னதுன்னிஸா, அக்கா கமலுன்னிஸாவை நோக்கி சொன்னாள்:

"ஆபா, பேச்சு போர்தான் நடந்ததே ஒழிய காரியபலன் எதுவும் காணவில்லை" அவள் பேச்சில் துயரம் தலையோங்கி நின்றது.

"ஏன்டி ஜன்னத், ஹபீக்கு ஆகிவிட்டால் அடுத்த கல்யாணம் அவசியம் உனக்குதான் ஆகுமென்ற நம்பிக்கையில், சீக்கிரம் முடியவில்லையே என்று துயரப்படுகிறாயா?" பெரிய அன்னி உம்மஸல்மா வேடிக்கையாக கேட்டு சிரித்தார். அவருடன் நாமும் சேர்ந்து சிரித்தோம்.

சாமிக்திரம் மாமு சுப்ஹான் பாஷாவும் அஹமத் பாஷாவும் வந்தார்கள். அவர்களின் அபிப்பிராயத்தை கேட்கும் பொருட்டு என் கல்யாண பிரச்சனையை கிண்டிவிட்டாள் அம்மா.

“அவன் தான் சம்பாதனை இல்லாமல் ஊரை சுற்றிக்கொண்டிருக்கிறனே............” அஹமத்பாஷா தன் பேச்சை முடிப்பதற்குள் அக்கா கமருன்னிஸா பேசினள்:

“படித்த பட்டாதாரிகள் எல்லாம் பிளாட்பாரத்தில் உறங்கும் இக்காலத்தில் அவரைமட்டும் கூறுவானேன். ஒரு சமயம் இப்போ சம்பாதனை இருந்து மணமான பிறகு, அப்துல் ரஷித்போல் சம்பாதிக்காமல் இருந்தால் என்ன செய்ய முடியும்?”

என் மைதுனரிடம் பேசியதுபோல் நூர்ஜஹான் என் மாமூமார்களிடம் கடுமையாக எதிர்க்க மாட்டாள் என்று அறிந்துதான் அவன் பாரத்தை கமருன்னிஸா ஏற்றுக் கொண்டாள்.

“சம்பாதனை இல்லாவிட்டாலும் சொத்துதான் ஏதாகிலும் முண்டா? அதுவுமில்லையே” அஹமத்பாஷா சொன்னர்.

“ஹபீப் ஆசைப்பட்டு கேட்பது ரஜாக்பாஷாவை, ஆஸ்திகளை அல்ல” அக்கா சொன்னள்.

“ஏ கமருன்னிஸா! உனக்கு புத்தி கித்தி உண்டா இல்லையா? அவன் போக்கிரி மாதிரி ஊரைசுற்றிக் கொண்டு வருகிருன் என்ருல் நீ என்னமோ வேதாந்தம் பேசுகிறுயே” அஹமத் பாஷா கோபத்தோடு சொன்னர்.

“அஹமத், ரஜாக்பாஷா போக்கிரியாக இருந்தாலும், போக்குவரத்து அற்றுஇருந்தாலும் அவனை நம்தம்பி என்று தான் சொல்வார்கள். அவனை இகழ்ச்சியாக பேசினல் நம் கைக்கொண்டு நாமே நம் கண்களை குத்தி கொண்டது போல, நம் குடும்பத்தை நாமே அவமதிப்பது போலாகும். உலகத்தில் வாழ்வு தாழ்வு என்பது பகல் இரவு போன்றவை. இன்றைய ஏழை நாளைய பணக்காரன். இது ஆண்டவன் புரத்தை சேர்ந்தது அவ்வளவு ஏன்? உன்னை படிக்கவைக்க தந்தை எவ்வளவு பாடுபட்டார், எங்கெங்கே கடன் வாங்கினர் அப்போது நாம் எப்படி இருந்தோம்? என்ன சாப்பிட்டோம்? இதை எல்லாம் கவனித்து பார்த்தாயா? மனைவி அறிவுள்ளவளாக இருந்தால் ஆண்டியையும் அரசனுக்கி விடுவாள், மேலும், அப்துல் ரஷீத் சொன்ன வார்த்தையிலிருந்து இக்கலியாணத்தை நிறுத்த முடியாதென்று தெரியவில்லையா?” இவ்விதமாக மாமு சுப்ஹான் பாஷா ஆண்டவன் நம்பிக்கையோடு விளக்கமாக தன் தம்பிக்கு விளக்கினர்.

"நம் குடும்பத்தில், அறிவிலும், ஆற்றலிலும், அன்பிலும், ஆதரிப்பதிலும், ஆசையாக பேசுவதிலும், பெண்களில் ஹபீபுக்கு நிகர் யாருமில்லை பாலைவனத்தையும் தன் பகுத்தறிவால் சோலைவனமாக சோபிக்க செய்வாள்" என் பெரிய அன்னி உம்முஸல்மா என்னை பெருமையாக இடையே பேசினாள்.

"சரிதான் புவ்வா, காலை என்ன டபால் வருகிறது பார்த்து வேலையை முடித்திடு" கடைசியாக அறிவுவந்தவர்போல் அஹமத் பாஷா ஆர்வத்தோடு சொன்னார்.

"நீங்கள் குறிப்பிட்ட ரஜாக்பாஷா என்னுடன் படித்தவர், எனக்கு நன்றாகதெரியும், தாராளமாக உத்திரவு கொடுக்கவும்" என்று மைதுனர் அப்துல் ஜப்பாரிடமிருந்து பதில்கடிதம் வந்தது. மற்ற கடிதங்களும் ஆட்சேபணையின்றியே வந்தது. ஆனால் என் தந்தைடபால்மட்டும் எதுவும் தெரிவிக்காமல் காலைவருகிறேனென்று அறிவித்தது என்கிலும் எனக்கு ஒன்றும் திகில் ஏற்படவில்லை. ஏனென்றால், என்மீது அவருக்கு அளவில்லா ஆசை. நான் பிறந்திருக்கும்போதுதான் அவருக்கு எதிர்பாராதவிதமாய் செல்வம் கிடைத்தது என்ற காரணத்தால் என் சகோதரிகளை விட என்னை வெகு அன்பாக பார்ப்பதோடு நான் கேட்டதில்லை என்று சொல்லாமல் கொடுப்பார் ஆகவே மீண்டும் என் காதலருக்கு சந்தோஷத்தோடு ஒரு கடிதம் எழுதினேன்.

கருணைமிக்க காதலருக்கு

அல்லாவின் அருளால் நம் தெய்வீக காதலை உணர்ந்த என் பெற்றோரும், உற்றோரும், சுற்றோரும், மற்றோரும் ஒரு மனதாக நமக்கு மணம்செய்ய முடிவு செய்துள்ளார். எனவே தாங்கள் மேஹ்ருபானி செய்து அம்மாவையும் சகோதரிகளையும் அனுப்பி தங்கள் வசதி பிரகாரம் கல்யாணநாள் நிச்சயிக்கும்படி வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு ஏற்பட்டிருக்கும் சந்தோஷத்தில் என்பார்......இல்லை மற்ற சேதிகள் முதல் இரவில்.

தங்கள் தேன் இதழ்களை பருகதுடிக்கும்
ஹபீபுன்னிஸா.

இக்கடிதம் அனுப்பிவிட்டதும் என் தந்தையாரும் வந்து சேர்ந்தார் வந்தவர் விஷயத்தைக்கேட்டு "எனக்கு எழுதாமல் வீணாக ஏன் இவ்வளவு சச்சரவு செய்தீர்கள்? ஹபீபுக்கு இஷ்டமிருக்கும்போது மற்றவரைப்பற்றி என்ன இருக்கு?" என் தந்தை சொன்னதும், பழம் நழுவி பாலில் விழுந்தது அதுவும் நழுவி வாயில் விழுந்தது போலிருந்தது எனக்கு.

என்வேண்டுகோள்படி என் காதலர் தன் இருசகோதரிகளாகிய ஜமிலாபானுவையும் கலீலாபானுவையும் அனுப்பிவைத்தார். என் தந்தையும் கொடுப்பதாக வாக்களித்து கல்யாணம் எந்த மாதத்தில் வைத்துக்கொள்ளலாமென்று கேட்டார். பெஜவாடாவிலிருக்கும் தன் தந்தைக்கு கடிதம் எழுதி அவர் குறிப்பிடும் நாள் சொல்லி அனுப்புவதாக சொல்லிவிட்டு உலக வழக்கப்படி நாஷ்டாவும் செய்துவிட்டுப் போனார்கள்.

அவர்கள் போன ஆறுவதுநாள் ரஹபர்பாக்ஷாவந்து, ரஜப் மாதம் பிறை ஐந்தில் நிக்காஹ் வைக்கும்படி பாவா எழுதி இருக்கிறார் என்றதும் என் தந்தையாரும் அந்ததேதியில் வைத்துக் கொள்வதாக சொல்லிவிட்டார்.

ரஜப்பு மாதம் பிரை ஐந்து, இன்றைய தேதியிலிருந்து கல்யாணதேதி கணக்கிட்டுப் பார்த்தேன். சரியாக ஐம்பத்தி ஏழுநாள் இருந்தது. இச்சமயம் எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தையும் குதுகலத்தையும் அளவிட எந்த உதார்ன படிகளும் இல்லை

நிமிஷங்கள் மணிகளாகி மணிகளும் நாட்களாகி நாட்களும் வாரங்களாகி வாரங்களும் ஒரு மாதமானதும், தெய்வீக காதல் என்ற கோஷத்தோடு கண்ணைக் கவரும் கலர்களிலும் பல பாஷைகளிலும், நம் கலியாண பத்திரிகைகள் காட்சி தந்தன. கலியாண நாள் நெருங்க நெருங்க பந்து ஜனங்களும் நெருங்கி வந்தார்கள்.

கடவுள் கிருபையாலும், தங்கள் ஆஸீர்வதத்தாலும், குறிப்பிட்டநாளில் நமக்கு வெகுவிமர்சையாக திருமணம் நடந்தேறியது.

அன்று முதல் இரவு நமக்காக அலங்கரிக்கப்பட்ட அறையில் நான் தனியாக பலங்கின்மீது உட்கார்ந்து கொண்டிருந்தேன். காலடிசப்தம் கேட்டு கடைக்கண்ணால் பார்த்தேன். அவர்தான் வந்தார். அவரைப் பார்த்ததும் என் கைகள் என் அனுமதியின்றி அவர் கால்களை தொட்டு முத்தமிட செய்தன. அவர் என் முகத்தில் இருந்த ஓட்னீ (போர்வை)யை அகற்றி முகத்தைப் பார்த்தார்.

“ஹபீப்! உன்னை அடைந்த பாக்கியசாலியாகிய என்னைப் போல் யாராகிலு முண்டா?” ஆசையோடு அணைத்தபடி சொன்னார்.

“தங்களைவிட நான்தான் அதிக பாக்கியசாலி” தலை குனிந்து கொண்டே சொன்னேன்.

“சரி முதலில், நமது நாயகம் சொல்லியபடி உன்சேலையின் தலைப்பில் நிக்காஹ் தொழுகை தொழுகவேண்டும்”யென்றதும், நான்

ஜானிமாஜில் உட்கார்ந்துகொண்டு என்சேலையின் தலைப்பபையை விரித்தேன். அவர் இரண்டு ரகாஅத்து நிக்காஹ் சுன்னத்து தொழுது எழுந்தார். நானும் அவருடன் எழுந்துவிட்டேன். மீண்டும் அவர் என் முகத்தை உற்றுப பார்த்து "காதல் கனியே, நீ அழகாக இருப்பதாக என் தங்கை சொன்னாள். ஆனால் உன் முகத்தில் இவ்வளவு ஒளி வீசுமென்று நான் எதிர்பார்க்கவில்லை" அவர் வாஞ்சையோடு என் முகத்தை தழுவியபடி சொன்னார்.

"தங்கள் மன ஒளிக்கும் என் முக ஒளி மட்டமானதே" மகிழ்ச்சி ததும்ப சொன்னேன்.

"என் உதடுகள் தாகமாக இருப்பதை அறிந்து அவர் உதடை என் உதட்டுடன் இணைத்தார். இதழ் ஈரம் பனிவர்தன அந்நேரத்தில் தேன் அருந்துவதுபோலவே எனக்கு தென்பட்டது. ஆசையால் விம்மிய என் மார்புகள் அவர் உடலுடன் மோதியது. மோதின மறுகணம் அந்தரங்க ஆசை சட்டுக்கடங்காமல் பீரிட்டு எழுந்தது. இதை அறிந்த விளக்குகள், தங்கள் லீலைகளை பார்த்து நம்மால் சகிக்கமுடியாது அதிலும் தங்களின் முகத்திலும மனதிலும் ஒளி வீசியே இன்ப நகருக்கு வழி காட்டுமபோது நாம் ஏன் வீணாக எரிந்து கொண்டிருக்க வேண்டும் தயவுசெய்து எங்களுக்கு சற்று ஓய்வு அளிக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டதால் கருணைமிக்க என் கணவரும் அதன் கோரிக்கையை நிருகரிக்காமல் உடனே விளக்குகளுக்கு ஓய்வு அளித்து விட்டார்.

கருணைகொண்டு விளக்குக்கு மட்டும் ஓய்வு அளித்தவர் கருணாகரரா? என்று நீங்கள் கவலையும் சந்தேகமும கொள்ளாதீர்கள். எங்கள் தெய்வீக காதல், சார்பாகதங்கள் யாவருக்கும் நீங்கள் கேட்கும் முன்னமே கருணையுடன் ஓய்வு அளிக்கிறோம்.

(இக்கதையில் உள்ள பெயர்கள் யாவும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுபவையல்ல)

தெய்வீகக் காதல் முற்றிற்று.

போர்க்களத்திலே பெருமானர்.

(வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)

கொடுமையான அனல் பொறிகளை அள்ளிப் பொழியும் பாலை சூழு நிலப்பரப்பு! விண்ணிலே வட்டமிட்டு விளையாடித் திரிந்த வண்ணப்பறவைகளெல்லாம் கண்ட இடங்களிலெல்லாம் கருகிவிழுந்தன. இத்தகைய பரிதாபத்தினை பார்த்துக்கொண்டே பவனிவந்த "பரிதி அரக்கனும்" பாய்ந்து பாய்ந்து சென்று தமது ஆட்சிப்பீடத்தின் மத்தியிலே அமர்ந்தான். மேலும் எனமென்னும் எரிமலையினையும் எடுத்து இறைத்துக்கொண்டேயிருந்தான். அமைதியின் அரவணைப்பிலே ஆழ்ந்து விட்ட அந்த மைதானத்திலே எங்கிருந்தோ, "அல்லாஹு அக்பர்!" என்னும் பேரொலி ரீங்காரம் செய்து கொண்டிருந்தது.

அடுத்த கணத்திலே என்ன விந்தை? மனித சஞ்சாரத்திற்கே முற்றிலும் மாறுபட்ட அந்த பயங்கர பாலைவனத்திலே, ஆற்றல் வாய்ந்த அழகிய அராபிய மாவீரர்கள் ஆயிரக்கணக்கிலே அணிவகுக்கப்பெற்று பறிவாகனக்காரர்களாகவும், பாத சாரிகளாகவும் "பரிசுத்த பச்சிளம் பிறை"பொறிக்கப் பெற்ற துவஜத்தைப் பகிரங்கமாக கரம்தாங்கி பறக்கவிட்டுக் கொண்டே ஆர்வம் ததும்ப மிக அன்மையிலே நெருங்கிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே அவர்களது வீரத்தின் விருது கூறல்தான் ஓங்கார சப்தமிட்டு வெடித்தெழும் அந்த "அல்லாஹு அக்பரென்னும்" அதிரொலி.

அவர்களது கடமைப்பணியின் கண்ணியத்தையும், களத்திலே கல்நெஞ்சக் கயவர்களுக்கு கருத்தூட்டும் தன் மானத்தையும் கரங்களிலே மின்னும் கூறிய கட்கங்கள் ஒவ்வொன்றும் அப்பட்டமான ஆதாரப்பிரிவுகளாக எடுத்துக்காட்டின. மத்தியிலே மஹான் நபி (ஸல்) அவர்கள் வன்மை பொலியுறும் வீரவைபோகத்தினூடே வாளேந்தி, வெண்புரவி யொன்றின்மீது வீற்றிருந்தார்கள்.

பக்கத்திலே தல்ஹா (ரலி) முதலிய தளகர்த்தர்களும், தமது தந்தையார் அப்துல்லா (ரலி) அவர்களின் உடன் பிறந்த சகோதரரும், உறுதி தளராத சிறிய தந்தையாருமாகிய ஹம்ஜா (ரலி) அவர்கள் ஈராக புடை சூழ்ந்து வந்து கொண்டிருந்தார்கள். சிறிது கோத்திற்கெல்லாம் இனம் தெரியாத மாபெரும் கூட்டமான படையொன்று சமரின் சங்காதத்தினை முழக்கியவாறு எதிர்திசையிலிருந்து எகிறிப்பாய்ந்தன. அவ்வளவுதான்......குருதி வெள்ளத்திலே கோடிட்டு கூறமுடியாத அளவிற்கு கொய்தப்பட்ட சிரங்கள் குவியலாக மிதந்தன. ஆம், பஞ்சடர்ந்த அப்பாலை பச்சை உதிரத்தை உல்லாசமாக உறிஞ்சு உவகைப் பூத்திற்று! நன், பொன் அத்தனையும் மௌனத்தில் ஆழ்ந்தன.

இவற்றையெல்லாம் படிப்படியாக பார்த்துக் கொண்டேயிருந்த அந்த "பரிதி அரக்கனும்" பயந்து நடுங்கியவனாக தமது "அந்தி என்னும் முந்தாணியை" இழுத்து முகத்தினை மூடிக் கொண்டு ஓடி ஒளிந்து விட்டான். இடமாற்றத்தை கண்ணுற்ற "இருளி"யும் இன்றென்ன இங்கு இத்தகைய விபரீதம்? என்று கேட்கும் பாவனையில் மெள்ள எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள். முஸ்லிம் முன்னணி வீரர்கள் முக்காற்பகுதி வாகை சூடிய அந்த சமயத்திலே, இறைவனின் எதிர்ப்பாரா சோதனையின் எடுத்துக்காட்டாக மூர்க்கன் ஒருவனின் வீரமற்றவெறிச் செயலாகிய பின்னால் மறைந்து நின்று தாக்கிய வேலுக்கு இலக்காகி, வீர மரணத்தை விரக்தியுடன் ஏற்று, புரவியிலிருந்து அந்த புழுதியிலே பிணமாக பிரண்டு விட்டார்கள் எங்கோனின் இதய கமலத்திலே என்றென்றும் அழியாதொரு இடம் பெற்றிருந்த இளைய தந்தையார் ஹம்ஜா (ரலி) அவர்கள், திடுக்கிட்டு திரும்பினார்கள். நமது தியாகத் தூதர்! அன்னவர்களை அந்தரத்திலே அலாதியாக தூக்குவதை போன்ற அதிர்ச்சியொன்று ஏற்பட்டு விட்டது. ஆம், அது ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சிதான்! அவர்கள் திரும்பிய அதே சமயத்திலே, உயிர் துறந்து உறங்கி கொண்டிருந்த தமது சிறிய தந்தையின் மார்ப்பகத்திலே ஒய்யாரமாக ஒரு யெவ்வன அணங்கை அமர்ந்த வண்ணம் அவர்களது நெஞ்சைப் பிளந்து ஈரல் குலையினை கொய்து, அங்காரத்தினூடே தமது பற்களால் கடித்துக் கொண்டிருந்தாள். அவைதான் சற்று முன்னர் பெருமானாரின் பார்வையிலே பிரதிபலித்துவிட்ட கோரக்காட்சி! பெண்ணுருவிலே அந்தப்பேய்பரம்பரை கொள்கையினை பற்றிப்பிடித்துக் கொண்டது. இயற்கையே! கற்பனை கதையோ என்று கவனமற்றிருக்கவேண்டாம். பொன்னேட்டிலே, புதுமையானதொரு அங்கத்தை தன்னகத்தே ஈர்த்துக்கொண்ட மகத்தான போர்க்குமுறைதான் இங்கு மெருகு குன்றாத சுவையோடு தருகின்றேன். அந்த ராக்ஷசியும் மாமிசப்பிண்டமும் யாரென்று நினைக்கின்றீர்கள்? அன்றைய குறைஷி கொடுங்கோன்மையாளர்களின் கூட்டுறவு குண்டன்! சாந்தமே உருவெடுத்த ஹம்ஜா (ரலி) அவர்களை தீரமற்றவகையிலே சமாதிகுழிக்கு அனுப்பிவைத்த சாங்கன்! உத்பா என்பவனின் உதிரத்திலே உருமாறிய புதல்வி இக்ரிமா என்னும் இழிகுணத்தவளே யாகும். தந்தைக்கொல்லாதனையை திண்ண, இத்தகையவெறிச் செயல்தான் பெருமானார் அவர்களையே பிரமிப்பிலாழ்த்தி விட்டன.

காத்தனின் கருணை, இறுதிகிரேஷ்டர் அவர்களின் இன்மதிவதனத்திலே பதிந்துவிட்டது. பேரிகை ஒலிக்க, பரமானந்தத்

துடன் பட்டொளிவீசி உயரப்பறந்து பரிசுத்த பச்சிளம்பிறை பொழித்தச்சின்னம்!

எஞ்சியுள்ள ஒரு சில எதிரிகள் தஞ்சமடைந்தனர்! அஞ்சியும் ஓடினர்!

வெற்றி வேந்தர்களாகிய முஸ்லிம்கள், எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

நள்ளிரவு! மக்கமாநகரிலே ஒருபுறம் குதூகலம்! மற்றொரு புறம் மறைந்த இஸ்லாமிய மாவீரர்களைப் பற்றிய மாளாத்துயர்!

பொறுமையின் பொக்கிஷமாகிய பெருமானார் அவர்களின் முன்னிலையிலே போரிலே பிடிபட்ட எதிரிகள் சிலரைக் கைதிகளாக நிறுத்தப்பட்டிருக்கின்றனர் புன்னகைதவழ அவர்களை யெல்லாம மன்னித்து, புக்ககம் ஏகுமாறு ஆக்ஞாபித்தார்கள் புண்ணியப் பெருமானார் அவர்கள். மூலையே அந்த மூமியாட்டபைசாசம் இத்ரிமாவும் அவர்களிடையே நிறுத்தப்பெற்றிருக்கின்றாள் அனைவரை கண்ணுற்ற எம்பெருமானார் அவர்கள் தமது திருமுகத்தினை கீழே தாழ்த்திய வண்ணாம கண்ணீர் சொரிந்துக்கொண்டு 'அம்மையரே! சுதந்திரமாக எங்கேனும் செல்லக் கடவாய். இனி என் முன்னில்லாதே' என்று துக்கம் தொண்டையை அடைக்க இயம்பினார்கள் அவ்வாறே அந்த கோர சொரூபமும் மறைந்தது. ஆச்சரியம் தாளாது அவர்கள் அங்ஙனம் அறையவில்லை; பெண்ணென்ற பதத்திற்கே பொருந்தாத அவளிற்கு அவள் பாதியவளாயிற்றே என்ற காரணத்தை முன்னிட்டுதான். அவளது அமைதியான விடுதலையினை கண்ணுற்று வியப்புற்ற அங்கு கூடியிருந்த முஸ்லிம் மாவீரர்கள். உலகை உய்விக்கவந்த உத்தமர் அவர்களே! தங்களின் உயிரினு மினிய சிறிய தந்தை யாரின் ஈரலை சுவைத்த இந்த சிறுத்தைக்கா சித்திரவதையின்றி விடுதலை? என்று வினவினர். செவியுற்ற சீர்திருத்த நபி (ஸல்) அவர்கள் சிரிப்பொலியினை சிதறவிட்ட வண்ணம், ஆம், சகோதரர்காள்! "வமா அர்ஸல்னாக இல்லாரஹ்மதுனலில் ஆலமீன!"

உங்கள் சமூகத்திற்கு என்னை ஒரு கொடுமையாளனாக இறைவன் அனுப்பவில்லை. கருணையின களஞ்சியமாகவே அனுப்பியுள்ளான். மேலும் "பஷ்தஃபிமா தும்மஹு வஆஃபீனா ஆணில் முஷ்ரிகின்" உங்களை நேர்மையிலே கெடுப்பட்ட எதிரிகளை சாரியாதிகளையும் தயவு, தாட்க்ஷணயமின்றி நடத்துதவவே என்னை இங்கு அனுப்பியுள்ளான் என்று பதிலிறுத்தார்கள், பாங்கொலியும் அழைத்தது, பரமனின் பக்தியை செலுத்த, எங்கோன் முதல் மற்றவர்களும் "இஷாதொழுகைக்கு" எழுந்துச் சென்றார்கள் என்னே விந்தை பெருமானாரின் புதுமையான தியாகப்போக்கு!

பாஸோவின் மர்மம்.

(தொடர் கதை 7-வது பகுதி)

அத்தியாயம் 19

குப்புற விழுந்து கிடந்த அம்மனிதனை ஷம்ஸ் திருப்பி பக்கத்தில் குனிந்து கவனித்தார் "உயிரிருக்கிறதா?" என்று ஹோட்டல்காரன் கேட்க, "கொஞ்சமிருப்பதாக தெரிகிறது. சீக்கிரம் சுடுதண்ணீரும் துவாலையும் கொண்டுவா. சோடே! டாக்டருக்கும் ஆம்புலன்ஸுக்கும் போன செய். இவன் பிழைப்பது கஷ்டமென்று நினைக்கிறேன் சீக்கிரம் சிகிச்சை செய்தால் பிழைக்கக் கூடும்" என்றார் ஷம்ஸ்.

இருவரும் சொல்லியபடி செய்யச் சென்றார்கள். ஷம்ஸ் மைக்கை ஒரு பக்கமாக சரித்து படுக்கவைத்து பார்க்க, முதுகில் கத்திகுத்து காயம் தென்பட்டது. தனது கைகுட்டையால அந்த காயத்தை துடைத்தார். மைக் ஸ்மரணையற்று கிடந்தான்.

ஹோட்டல்காரன் வெண்ணீர் டவலுடன் ஓடி வந்தான்.

சோடேவும் போன் செய்தபின் வந்தான்.

"சுடப்பட்டானா?" என்று ஹோட்டல்காரன் கேட்க, "இல்லை கத்தியால் குத்தப்பட்டிருக்கிறான். இன்று அந்நியர்கள் யாரையும் இங்கு பார்த்தீர்களா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

ஒன்றிரண்டு அந்நியர்களைப் பார்த்தேன். ஆனால் அடிக்கடி பட்டணத்திலுள்ள அந்நியர்கள் இங்கு வருவது வழமை" என்றான் ஹோட்டலகாரன்.

இதற்கிடையில் சோடே, மைக் வந்த வழியே கொஞ்ச தூரம் போய் பார்த்து திரும்பி வந்து "யாருமில்லை, ஒரு காருமில்லை, பின்னாலுள்ள சிறியசந்திலிருந்து இதுவரை இரத்தம் வடிந்திருக்கிறது. இருட்டில் பின்னால் வந்து குத்திவிட்டு ஓடியிருக்கலாம்" என்றான்.

"அந்த சந்திற்கு மைக் போக வேண்டிய வேலை என்ன? அவன் வீட்டிற்கு போவதானால் முன் வழியாகத்தானே போயிருக்க வேண்டும்?" என்று ஷம்ஸ் கேட்க, "யாரையாவது கண்டுபேச போயிருக்கலாம்" என்று ஹோட்டால்காரன் சொன்னான்.

"அவன் தலை ரோமத்தைப்பார்! தண்ணீர் பட்டவிடங்களி லெல்லாம் ரோமங்கள் வெளுக்காமலிருக்கிறது. ரோமம் வெளுத்த

மாதிரியிருக்க ஏதோ சாயத்தை பூசியிருக்கிறான் அதன் காரணம் தெரியவில்லை" என்றார் ஷம்ஸ்.

அதற்கு ஹோட்டல்காரன் "இது நூதனமாக யிருக்கிறது எனக்கு ரோமம் வெளுத்தபின் கருப்பாக்க சாயம் பூசலாமென்றிருக்கிறேன். இவன் செயல் மாறறமாக யிருக்கிறதே" என்று சொல்லி ஆச்சரியப்பட்டான்.

கொஞ்சநேரத்தில் அங்குள்ள சார்ஜெண்ட் வந்தான் அவனிடம் மைக்கின் விஷயத்தைத் தெரிவித்தபின் "இங்கு அந்நியர்கள் யாரையும் பார்த்தியா? நான் ஒரு மனிதனைத் தேடுகிறேன். அவனுக்கு சுமார் 40 வயது; உயர்தரமான ஸூட் அணிந்திருப்பான்; கண்கள் நீலமும் கருப்பும் கலந்த கலராக யிருக்கும்" என்றார் ஷம்ஸ்.

"நீங்கள் சொல்லும் அந்நியனை நான் பார்த்த ஞாபகமிருக்கிறது. ஆனால் எப்பொழுது? எங்கே? என்று ஞாபகமில்லை" என்று சார்ஜெண்ட் சொன்னான்.

பிறகு சார்ஜெண்டிடம் மைக்கைக் கவனித்துக்கொள்ளுமாறு சொலலியபின் ஷம்ஸும் சோடேவும் ஹோட்டலை விட்டு பிறப்பட்டார்கள். "நீங்கள் சார்ஜெண்டிடம் பாஸோவை விபரித்தீர்களல்லவா?" என்று சோடே கேட்க, "ஆம்! பாஸோவை நான் பார்க்கவில்லை. டாம், மைக் இருவரும் சொன்ன அடையாளத்தை வைத்துக் கொண்டு, விபரிததேன்" என்றார் ஷம்ஸ் இருவரும் காரில் ஏறியபின், "இருட்டி விட்டது பேய் பிடித்த வீட்டை பரிசோதித்து பார்க்கலாம்" என்றார் ஷம்ஸ்.

அத்தியாயம் 20

டவ்டன் பார்க்குக்கு கொஞ்சம் தூரத்திலேயே காரை நிற்பாட்டி, மெதுவாக சப்தமின்றி இருவரும் நடந்து அவ்வீட்டின் பின்புறம் வந்தார்கள். "நிசப்தமான இடம்! எத்தனை மணிக்கு பேய் நடமாடுமோ?" என்று சோடே கேட்க "கூடிய சீக்கிரம் தெரிந்துவிடும்" என்றார் ஷம்ஸ்.

இருட்டில் ஷம்ஸ் தனது சிறிய டார்ச்சை உபயோகித்து, பின் கதவைபார்த்து திறந்தார். பின் கூடத்தைக் கடந்து சமயலறை வந்தார்கள். அங்குள்ள கதவைத்திறந்து பார்த்தார்கள் ஒரு பெரிய ஹாலிருந்தது; நடுவில் ஒரு படிக்கட்டு மிருந்தது. அச்சமயத்தில் அவ்விருட்டில் ஒரு மனிதன் வாயால் சீட்டி ஊதும் சப்தம் கேட்டது. "சீட்டி ஊதும் பேய்!" என்று மெதுவாச் சொன்னான் சோடே.

"புதிய இராகம் தெரிந்த பேய்" என்றார் ஷம்ஸ்.

பின்பு இருவரும் மெதுவாக அங்குள்ள படிகளில் ஏறினார்கள். மேலே சென்றதும், திடீரென்று இராகம் நின்றது. இருவரும் அசையாமல் அப்படியே நின்றார்கள். கொஞ்ச நேரம் கழிந்தபின் அங்குள்ள வராண்டாவில் போய், கடைசியிலுள்ள ஜன்னலின் பக்கத்தில் நின்றார்கள். அங்கு படுக்கையறைகள் அநேகம் காணப்பட்டன. ஒன்றிரண்டின் கதவுகள் திறக்கப்பட்டு காலியாக யிருப்பதாக தோன்றியது. அங்கேயே சப்தமிடாமல் நின்றார்கள். கொஞ்ச நேரத்திற்குப்பின் கொஞ்ச தூரத்தில் ஒரு அறையிலிருந்து ஒரு உருவம வருவதுபோல் தோன்றியது. இருட்டில் சரியாக தெரியாவிட்டாலும், அது மனிதனின் உருவம் என்றறிந்தார்கள். டார்ச்சை உபயோகித்தால் தங்களுக்கு அபாயம் என்று தீர்மானித்தார் ஷம்ஸ். அம்மனிதன் இவ்விருவரிருப்பதை அறியாததால், அவன் இருட்டிலேயே படிகளின் மூலம் இறங்கிப் போனான். அச்சமயத்தில் சோடேவை ஒரு அறையினுள் இருக்கச்செய்து தான் கொஞ்சம் முன் வந்து மெதுவாக "ஜான்ஸன்!" என்றார்.

அப்பெயரைக் கேட்டதும் அவன் அப்படியே படியில் நின்றான். ஷம்ஸ் சொன்னது மிகவும் மெதுவாக சொன்னதால், அவனுக்கு சந்தேகமாயிற்று. திரும்பிப் பார்த்து கொஞ்ச நேரம் நின்றான். பிறகு படிகளின் பக்கம் திரும்பினான்.

"ஜான்ஸன்!" மறுமுறை மெதுவாக சப்தமிட்டார்.

உடனே அவன் பின்னால் வந்து சுவற்றினோரமாக ஒதுங்கினான். "யார்?" என்று அவனும் மெதுவாக கேட்டான். ஷம்ஸ் பதில் சொல்லாமல் தூரத்திலேயே நின்றார்.

"யார்?" என்று உறக்க சப்தமிட்டான். ஒருவரும் நகரவில்லை. இதற்கிடையில் அவன் கையில் துப்பாக்கி எடுத்துக் கொண்டான்

"உன்னைத்தேடி அதிக தூரத்திலிருந்து வந்துள்ளேன்" என்று மெதுவாக ஷம்ஸ் சொன்னார்.

அவன் ஒரு அடி முன் வந்தான். முன்னாலிருப்பவன் எங்கு ஒளித்து கொண்டிருக்கிறானென்பது தெரியாததால் பயந்து அங்கேயே நின்றான். "அதைப்பற்றி விபரமாக பேசலாமே!" என்று உறக்க சொல்லிக்கொண்டே ஒரு அடி இன்னும் முன் வந்தான்.

"போதும் பேசியது" என்றார் ஷம்ஸ்.

"ஏன்" என்று அவன் கேட்டுக்கொண்டே இரண்டு அடி முன்பு வந்தான்.

அவன் வலது கையில் கைத்துப்பாக்கி யிருப்பதை கவனித்தார். இடது கையிலென்ன யிருக்கிறதென்று தெரியவில்லை.

“உனது தாயார் எல்லாம் சொல்லி விட்டாள்” என்றார் ஷம்ஸ்.

“எனது தாயாரா! உனக்கென்ன பைத்தியமா?” என்று சொல்லிக்கொண்டே பதில் எங்கிருந்து வருகிறதென்று கவனித்தான்.

“இல்லை நான் என்ன சொல்லுகிறேன் என்று உனக்கு விளங்கும்” என்றார் ஷம்ஸ்.

சப்தம் அதிக தூரத்திலிருந்து வருவதாக தெரிந்தது. “நீ யார்?” என்றான்.

“ஞாபகமில்லையா? டவ்டன் ஞாபகம் வருகிறதா?” என்றார். அதைக் கேட்டதும் அவன் பெருமூச்சு விடும் சப்தம்கேட்டது.

“பேய் விளையாட்டு ஆடுகிறீரே!” என்று அம்மனிதன் கேட்டுக்கொண்டே இன்னும் இரண்டு அடிமுன்பு வந்தான். “ஜான்ஸன்! என்னை பார்க்க உன்னால் முடியாது. ஆனால் உன்னை பார்க்க என்னால் முடியும். ஏன் பின் திரும்பி பார்க்கிறாய் முட்டாளே!” என்றார் ஷம்ஸ்.

தானிருப்பது எதிரிக்கு நன்றாக தெரிகிறதென்றெண்ணி, பயந்து ஒரு அடி பின் வந்தான். இருட்டில் பேசும் மனிதன் முன்னாலிருக்கிறானா, அல்லது பின்னாலா என்பதில் சந்தேகம் உதித்தது. உடனே அவன் திரும்பிசுவற்றோரமாக உள்ள ஜன்னல் கதவில் மறைந்தான். அவன் திரும்பும்போது இடது கையிலுள்ள கத்தியின் பளபளப்பை ஷம்ஸ் கவனித்தார்.

“நீ பேச மறுக்கிறாய். பின் என்ன செய்யப் போகின்றாய்?” என்று கேட்டான் ஜான்ஸன்.

“சரி, பேசலாமே” என்றார் மெதுவாக ஷம்ஸ்.

“உனக்கென்ன நேர்ந்தது? நீ இறந்து விட்டாயே! நீ இறந்து விட்டாயென்று சத்தியமும் செய்வேனே” என்று சொல்லிக்கொண்டு சுவற்றினோரமாக கொஞ்சம் முன் வந்தான்.

“இறந்தேனா?” என்று ஷம்ஸ் கேட்டார்.

“உனக்கு உயிரிருந்திருந்தால் நான் உன்னை விட்டு வந்திருக்க மாட்டேனே” என்று கோபத்துடன் ஜான்ஸன் சொன்னான். உடனே ஜான்ஸன் ஏதோ குனிந்து தரையில் விழுவதுபோல்

தோன்றியது. கதவு மூடும் சப்தம்போல் கேட்டது. ஜான்ஸன் மறைந்து விட்டான்.

"ஏதோ ஒரு இரகசிய அறையின் வழியாக போய் விட்டான் போல் தோன்றுகிறது" என்று ஷம்ஸ் சொல்லி இருவரும் அந்த வராண்டாவின் தரையை கவனித்தார்கள்.

ஜான்ஸன் நின்று கொண்டிருந்த இடத்தில் டார்ச் விளக்கின் மூலம் கவனித்தார்கள். ஒடும் காலடிசப்தம் கேட்டது. தரையில் இரண்டு பலகை சேருமிடத்தில் சிறிது கம்பளியின் ரோமம் தெரிந்தது.

"அவன் கோட்டு மாட்டிக் கொண்டது" என்றார் ஷம்ஸ்.

அவசரமாக அதற்கருகாமையில் அங்குமிங்கும் அமிழ்த்திப் பார்த்தார் ஒன்றும் நடக்கவில்லை. ஷம்ஸும் சோடேவும் எத்தனையோஇரகசிய அறைகள் திறந்திருந்தும் இதற்கு வழிதெரிய வில்லை. " அவன் ஓடிப்போக முயற்சிப்பான். நீ வீட்டின் பின் புறமாக ஓடிப்பார். நான் காரிடம் போகிறேன்" என்று ஷம்ஸ் சொல்லி, இருவரும் ஓடிப்போனார்கள்.

சோடே வீட்டின் பின்புறம் ஓடிப்பார்த்தான். நிசப்தமாகயிருந்தது. திடீரென்று ஒரு கார்சப்தம் கேட்டது. வீட்டின் பின்புறத்தில் குதிரை கட்டக்கூடிய லாயத்திலிருந்து சப்தம் வருவது போலிருந்தது. சப்தம் வரும் திக்கை நோக்கிச் சென்றான் சோடே. அதற்குள் எதிரே காரின் விளக்கு பிரகாசமாக தெரிந்தது. தன்னை நோக்கி வந்தது. பக்கத்தில் பாய்ந்தான் சோடே. கார் தன்னருகாமை வந்ததும், பாய்ந்து காரின் ஜன்னல் வழியாக டிரைவரைப் பிடித்தான். உடனே கார் ஒரு சுற்று சுற்றியது. சோடேவால் நிற்க வசதியில்லாததால் உருண்டு கீழே விழுந்தான். கார் ஓடிற்று. ஷம்ஸ் தனது காரினருகே போய், காரை திருப்புவதற்குள் மற்ற கார் அதிக தூரம் போய்விட்டது. அது போன திக்கிலேயே இவரும் தனது காரை மிக வேகமாக ஓட்டிப்போனார். கொஞ்சதூரம் ஓட்டியபின் முன்னால் அந்த கார் தெரிந்தது. ஷம்ஸ் தனது காருக்கு விளக்கில்லாமல் அதற்கு பின்னாலேயே ஓட்டிப் போனார். "இந்த கார் டாமின் காராயிருக்கவேண்டும். டவ்டன் பார்க்கில் ஒளித்து வைத்திருக்கிறான்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

அதிக தூரம் சென்றபின் அக்கார் சுற்று வழியாக திரும்பி டாமின் கிராமத்தை நோக்கிச் சென்றது. பின்யாரும் தொடரவில்லை யென்றறிந்தபின்னர் திரும்புகிறான் என்று ஷம்ஸ் நினைத்தார். ஆனால் தவராக நினைத்தார். திடீரென்று முன்னால் போய்க்

கொண்டிருந்த கார் திரும்பி ரோட்டின் நடுவே குறுக்கே நிற்பாட்டப் பட்டது. பின்னால் வேகமாக வந்துக் கொண்டிருந்த ஷம்ஸ் பிரேக் போட்டார். என்ன செய்தும் மோதுதல் நிற்கவில்லை. மோதியதும் எதிரே குறுக்காக வைக்கப்பட்ட கார் தலை கீழாக புரண்டது. ஜான்ஸன் தான் வந்து காரை குறுக்கே நிற்பாட்டியதும், பின்னால் வரும் கார் மோதுவதற்குள் காரைவிட்டு குதித்து ஓடிவிட்டான். ஷம்ஸின் கார் மோதியதால் காரின் கதவுகள் வளையப் பட்டன. திடீரென்று எதிர்பாராத இச்சம்பவம் நடைபெறவே, ஷம்ஸ் திகைத்து அக்காரிலேயே சிலநிமிஷங்கள் யிருந்தார். பிறகு கஷ்டத்துடன் காரைவிட்டு வெளியேறினர். ரோட்டில் யாரையும் காணோம். ரோட்டின் இருபுறத்திலும் அடர்த்தியான செடிகளிருந்தன. அதனுடைய உதவியால் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டான் ஜான்ஸன். ஷம்ஸுக்கு தலையில் வலி தோன்றவே, தடவிப் பார்த்தார். தலையில் மோதியதால் ஒரு காயம் ஏற்பட்டிருந்தது. அவர் பிரேக் போட்டதில் ஒரு வினாடி பிந்திருந்தால், அவர் பிழைத்திருக்க முடியாது.

அத்தியாயம் 21

டாமின் கிராமத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில், சார்ஜெண்ட் ஷம்ஸ், சோடே மூவரும் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். சார்ஜென்ட், இருவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"நீங்கள் அவனைப் பின்தொடர்ந்து சென்றபின், நான்குதிரை கட்டும் இடத்தைப் போய் பார்த்தேன். அங்கே வைக்கோல் கட்டுகள் நிரம்பி யிருந்தன. காரை அந்த கட்டுகளின் பின்னால் மறைத்து வைத்திருந்ததாக தெரிகிறது. அங்கேயே ஒரு சாதாரண வழியிருந்தது. அக்கதவை திறந்து அவ்வழியினுள் பார்க்க, அது தான் இரகசிய வழி" என்று சோடே சொல்லி இரகசிய வழியை விபரித்தான்.

"அப்படியானல் இவன்தான் டவ்டன் பார்க்கிலுள்ள பேய்"? என்றார் சார்ஜெண்ட்.

"ஆம்! இவன் அவ்வீட்டி லிருந்து கொண்டு, அவ்வீட்டை யாரும் வாங்காமலிருக்க, பேய் யிருப்பது போல் பயங்காட்டிக் கொண்டிருந்தான்" என்றார் ஷம்ஸ்.

"ஏன்" என்று சார்ஜெண்ட் கேட்க, "ஏதோ அவ்வீட்டில் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறதென்றெண்ணி, அதை தேடிக் கொண்டிருந்திருக்கிறான்" என்றார் ஷம்ஸ்.

"அது என்ன?"

"அவன் ஆஸ்ட்ரேலியாவி லிருக்கும் போது இந்த டவ்டன் பார்க் தனக்கு சொந்தம், தான் வாரீஸ்தாரர் என்று கேஸ் போட்டான். பிறகு அதை வாபீஸ் வாங்கிக் கொண்டான். இந்த வீட்டில் தனக்கு வேண்டிய அத்தாட்க்ஷி யிருக்கக்கூடுமென்று நினைத்திருக்கக்கூடும்" என்றார் ஷம்ஸ்.

"ஒரு சொத்தின் சொந்தக்காரனின் மகன் அச்சொத்துக்கு வாரிஸ் தாரனாக யிருக்க, இன்னொருவன் அந்த சொத்து தன்னுடையதென்று தாவா செய்வது எனக்கு நூதனமாயிருந்தது. அதில் மர்மம் ஏதோ இருக்க வேண்டுமென்று நினைத்தேன். தற்போது தெரிந்தது. டவ்டன் இறந்துவிட்டானென்று அறிந்து ஜான்ஸன் தாவா செய்தான். அதுவுமல்லாமல் அவனைக் கொன்றதும் ஜான்ஸனே" என்றார் ஷம்ஸ்.

"அவன் தான் ஒத்துக் கொண்டானே" என்றான் சோடே.

" இப்பொழுது நமது கேஸ் ஒழுங்காக வருகிறது" என்றார் ஷம்ஸ்.

"சரி நேற்று கொல்லப்பட்ட ஜான்ஸன் யார்?" என்று சோடே கேட்க "இறந்தவனும் உயிருடனிருப்பவனும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியிருக்கிறார்கள். ஒருவன் கோர்ட்டில் தாவா செய்வதனால் அத்தாட்க்ஷி ஒன்றுமில்லாமல் தாவாசெய்யமாட்டான். ஆதலால் ஜான்ஸன் டவ்டன் குடும்பத்தில் சேர்ந்தவன் அல்லது பாத்தியஸ்தனாக யிருக்கவேண்டும்" என்றார் ஷம்ஸ்.

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. டவ்டன் பார்க் மதிப்பில்லை. அந்த இடத்திற்கா தாவா?" என்றார் சார்ஜென்ட்.

"இதை வெஸ்ட்லேன்ட் பாங்க் என்ன விலைக்கு வாங்கியிருந்தார்கள் தெரியுமா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"முப்பதினாயிரம் பவுன்ட் யிருக்கலாம்" என்றார் சார்ஜென்ட்.

" அது என்ன கொஞ்ச பணமா?" என்று ஷம்ஸ் கேட்க, "ஆம் நீங்கள் சொல்வது சரிதான். முப்பது பவுண்டுக்கு தற்காலம் கொலைகள் நடக்கிறதே! இது 30000" என்றார் சார்ஜென்ட்.

"இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது டெலிபோன் மணி அடிக்க, சார்ஜென்ட் எடுத்து கேட்டபின் ஷம்ஸ்யிடம் கொடுத்து " இன்ஸ்பெக்டர் பவுட்ஸ் உங்களுடன் பேச வேண்டுமாம் " என்றார்.

ஷம்ஸ் டெலிபோனைவாங்கி கேட்க, "அந்த நோட்விஷய மாக பாங்கில் பார்த்தோம் ஒரு நோட்டில் சிகப்பு மை பின்புறம் பட்டிருக்க, சந்தேகப்பட்டோம். பிறகு நோட்பார்வையிடும் நிபு ணன் ஒருவனை யழைத்து பரிசோதித்தோம். அவன் ஒவ்வொரு நோட்டாக பார்த்துக்கொண்டிருக்கிறான். அவன் இதுவரைஎல்லாம் நல்ல நோட்டுகள் என்றுதான் சொல்லுகிறான்" என்றார் பவுட்ஸ்.

"சிகப்பு மை பட்ட நோட்டைப்பற்றி என்ன சொல்லுகிறான்" என்று ஷம்ஸ் கேட்க, "நோட்டுகட்டுகளின்மேல் எழுதும் இங்க் பட்டிருக்கக்கூடும் மென்றும் அதுவும் நல்ல நோட்டு என்று சொல்லுகிறான்" என்றார்.

"ஒரு நிமிஷம் பொறுங்கள்" என்று சொல்லி ஷம்ஸ் போனை கீழே வைத்து தனது ஜேபியிலுள்ள ஒரு சிறிய நோட்புக்கை எடுத் தார். அதினுள் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய காகிதத்துண்டை எடுத்துப் பார்த்தபின் டெலிபோனை எடுத்து "நான் இரண்டு நம்பர்கள் சொல்லுகிறேன் எழுதிக்கொள்ளுங்கள். டாமின்மெத்தை யறையில் கிடந்த இரண்டு நோட்டுகளிலுள்ள நம்பர்கள் இவை! பாங்கிலுள்ள நோட்டுகளில் இந்த நம்பருடையவை உண்டா என்று பாருங்கள்" என்றார் ஷம்ஸ்.

"பார்த்து இப்பொழுதே சொல்லுகிறோம்" என்று பவுட்ஸ் சொன்னார்.

கொஞ்சநேரம் காத்துக்கொண்டிருந்தபின் "அந்த நம்ப ருடைய நோட்டுகள் இங்கிருக்கின்றன" என்றார் பவுட்ஸ்.

"அதே நம்பருடைய நோட்டுகள் இரண்டும் இங்கு எனது ஜேபியில் இருக்கின்றன" என்று ஷம்ஸ் சொன்னார்.

"அப்படியானால் உங்களிடமுள்ளவை பொய் நோட்டுகளாக விருக்கவேண்டும்" என்றார் பவுட்ஸ்.

"இருக்கலாம். ஆனால் இவைகளை நான் பரிசோதித்ததில் உண்மை நோட்டுகளாக தோன்றுகின்றன" என்று ஷம்ஸ் சொன் னார்.

"எப்படியும் பொய் நோட்களிருப்பது உண்மை" என்று பவுட்ஸ் சொல்ல, "ஆம்! நான் இப்பொழுது அங்குவருகிறேன்" என்று ஷம்ஸ் சொல்லி, ஒரு டாக்ஸிகாரில் இன்ஸ்பெக்டரிடம் வந்து சேர்ந்தார்.

அங்கு மூலையில் ஒரு மனிதன் ஒரு நாற்காலியில் தூக்கக்கண் களுடன் சோர்ந்து உட்கார்ந்திருந்தார். அவரை இன்ஸ்பெக்டர்

பவுட்ஸ் சுட்டிக்காண்பித்து "இவர்தான் நோட்டுகளை பரிசோதிக்கும் நிபுணர் ட்ரேக். உங்களிடமுள்ள நோட்டுகளை காண்பியும்" என்றார்.

ஷம்ஸ் இருநோட்டுகளையும் ட்ரேக்கிடம் கொடுத்தார். அவர் ஒரு கண்ணை மூடிக்கொண்டு, ஒரு கண்ணை திறந்தவண்ணம் அந்நோட்டை அதிக நேரம் கவனித்தார். பின்பு "மிகவும் திறமாக செய்யப்பட்டிருக்கிறது அதே எழுத்துகள் கலரும் மாறவில்லை. எல்லாம் ஒழுங்காக யிருக்கிறது" என்றார்.

"எப்படி பொய்நோட்டுக்கும் உண்மை நோட்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பீர்கள்?" என்று பவுட்ஸ்கேட்க, "இந்த நோட்டுகள் செய்வதற்கு உபயோகமாகும் தண்ணீரை கவனிக்க முடியும். என் கண்ணுக்கு அது தெரியும். நீரெழுத்தைப்பார்த்தால், எந்த தண்ணீரைக்கொண்டு இக்நோட்டு செய்யப்பட்டிருக்கிற தென்று தெரியும். நமக்கு வழமையாக அச்சிடப்படும் இடங்களிலுள்ள தண்ணீரால் இந்த இரண்டு நோட்டுகளும் செய்யப்படவில்லை. இது நமது ஊரிலுள்ள ஆற்றுத்தண்ணீரால் செய்யப்பட்ட நோட்" என்றார் ட்ரேக்.

"இதை நான் கொண்டுபோய் இன்னும் நன்றாக பரிசோதித்து இதைப்பற்றி எனக்கு தெரிந்தவரை எழுதியனுப்புகிறேன்" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்றார் ட்ரேக்.

"இதைப்போல் நோட்டுகள் செய்து பாங்கிலுள்ள நோட்டுகளை எடுத்துக்கொண்டு பகரமாக பொய் நோட்டுகளைவைத்துவிடும் யோசனை! பிரமாதமான யோசனை" என்றார் பவுட்ஸ்.

"அவ்வாறே செய்திருப்பார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ, பாங் திறக்கப்பட்டதும், மணி அடிக்க ஆரம்பிக்கவே, போலீஸ், திருடர்களுக்கு முன்பு வந்துவிட, பாங்கில் உள்ள நோட்டை மாற்றமுடியாமல் போய்விட்டது" என்றார் ஷம்ஸ்.

"அது திருடர்களின் துர் அதிர்ஷ்டம்" என்றார் பவுட்ஸ்.

"நல்லது! ஜான்ஸன் ஆஸ்ட்ரேலியாவில் என்ன கேஸ்களிலெல்லாம் அகப்பட்டு தப்பித்தான் என்பதை ஆஸ்ட்ரேலியாவுக்கு நீங்கள் தந்தியின் மூலம் கேளுங்கள். அவை தெரிந்தால் அவன் எப்பேர்பட்டவன் என்று அறியக்கூடும்" என்றார் ஷம்ஸ்.

"கொலைகள் ஏதும் செய்திருப்பானா?" என்று சோடே கேட்க, "சிலமணி நேரங்களுக்குள் நமக்கு தெரியும்" என்று ஷம்ஸ் சொன்னார்.

"அவன் தப்பித்துக் கொண்டானே" என்று சோடே சொல்ல "அவனைத் தேடிப்பிடிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்றார் பவுட்ஸ்.

"நான் டாமுடன் பேச விரும்புகிறேன்" என்று ஷம்ஸ் கேட்க, தனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை என்று பவுட்ஸ் சொல்லவே, சோடேவுடன் ஷம்ஸ் ஜெயிலுக்குள் சென்று டாமைச் சந்தித்தார். அவன் கண்களெல்லாம் சிகப்பாக, அநேக இரவுகளாக தூங்காமலிருப்பது போல் தோன்றியது.

"ஜேனைப்பற்றி விஷயம் தெரிந்ததா?" என்று டாம் கேட்டான்.

"இதுவரை யில்லை. கூடிய சீக்கிரம் கிடைக்கும்" என்றார் ஷம்ஸ்.

"உனக்கு ஸ்டோன் பழக்கமா?" என்று ஷம்ஸ் கேட்க "ஒரு முறை பார்த்திருக்கிறேன்" என்றான்.

"எவ்வாறு எதற்காக அவனை சந்தித்தாய்?" என்று ஷம்ஸ் கேட்க, "அவன் எனக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தான். அதில் தான் காகிதம் செய்யும் விஷயத்தைப்பற்றி தான் ஒரு புஸ்தகம் எழுதுவதாகவும், அவ்விஷயமாக நான் முன் காகித மில்லில் வேலை செய்திருந்ததால், என்னிடம் கொஞ்சநேரம் பேச வேண்டுமென்றும், தான் மியூஸியத்தில் வேலை செய்வதாகவும் என்றைக்காவது மாலை நேரத்தில் எனக்கு வசதிபட்டால் வந்து சந்திக்குமாறும் எழுதியிருந்தது. ஒரு நாள் நானும் ஜேனும் பட்டணம் போயிருந்தோம். அப்பொழுது இந்த கடிதம் ஞாபகம் வர, மியூஸியத்திற்கு போய்ப்பார்த்து, காகிதம் விஷயமாக பேசிக்கொண்டிருந்தோம்" என்றான் டாம்.

"பணம் ஏதும் கொடுத்தானா?" என்று ஷம்ஸ் கேட்க, டாம் சிரித்துக்கொண்டு "அரை கிரவுன் கொடுத்தான். நான் அதை என் வீட்டின் மூலையில் ஒரு சிறிய பெட்டில் போட்டுவைத்திருக்கிறேன்" என்றான்.

"நீ பேசியதில், காகிதம் செய்யும் விஷயமாக ஸ்டோன் ஏதாவது அறிந்திருந்தானா?" என்று ஷம்ஸ் கேட்க, "அவன் புஸ்தகங்களிலுள்ள விஷயங்களநேகம் மனப்பாடமாக படித்திருந்தான். நேரே செய்தவர்களிடம் கேட்டறிய வேண்டுமென்றே என்னை கூப்பிட்டிருந்தான்" என்றான் டாம்.

"நீ கூடிய சீக்கிரம் நல்ல செய்தி கேள்வி படுவாய்" என்று சொல்லி ஜெயிலை விட்டு வெளியே வந்தார் ஷம்ஸ். அச்சமயத்தில்

ஜெயில் காவற்காரன் ஒரு கவர் கொடுத்து, இன்ஸ்பெக்டர் பவுட்ஸ் கொடுத்ததாகச் சொன்னன்.

அவர் கவரினுள் பார்க்க "இது போலீஸ் ஸ்டேஷன் முன் பாக படியில் கிடந்தது. இதை போட்டோ எடுக்க வேண்டும். ஆதலால் ஜாக்கிரதையாக பாருங்கள்" என்று பவுட்ஸ் எழுதிய கடிதமும் இன்னெரு சிறிய 4" X 2" அளவுள்ள காயிதமும் யிருந்தது. அந்த காயிதத்தில் "போலீஸ் என்னை தேடிக் கொண்டிருக்கிறுர்கள். அதை நிற்பாட்டவேண்டியது. இன்று விடியற்காலேக்குள் என்னை தேடுவதை நிற்பாட்டா விட்டால், ஜேனை பார்க்கவே மாட்டீர்கள். என்னை தேடுவதை விட்டுவிட ஒத்துக்கொண்டால், போலீஸ் சங்கை 2 முறை ஊதவும். நாங்களும் ஜேனும் அந்த சங்கு சப்தத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேம்" என்று எழுதி யிருந்தது.

அத்தியாயம் 22

"அது என்ன?" வென்று டாம் கேட்டான்.

"அது ஒன்று மில்லை. நான் தற்போது கேட்கும் கேள்விகளுக்கு பதில் யோசித்து சொல்லவேண்டும். அன்றிரவு பாஸோவைத் தேடிவந்தார்களே அவர்கள் எப்படி யிருந்தார்கள்?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"கதவினருகே நான்குபேர் நின்றனர். ஆனல் அதில் ஒருவன் முன் வந்தான். அவனைத்தான் பார்த்தேன். மற்ற மூவரும் இருட்டில் நின்று கொண்டிருந்ததால் எவ்வாறிருந்தார்களென்று சொல்ல முடியாது"

"ஜான்ஸனின் கண்கள் என்ன கலர்?

"நீலம் கலந்த கருப்பு கலர்"

"பாஸோவின் கண்கள்?"

டாம் இதைக்கேட்டதும் ஆச்சரியமுற்று "இரண்டு பேருடைய கண்களும் ஒரே கலராகத்தான் யிருந்தது" என்றுன்.

"காலையில் டவ்டன் பார்க்கில் ஜான்ஸனை பார்த்தாயே, அவன் அணிந்திருந்த ஸூட்டும், இரவு பாஸோ அணிந்திருந்த ஸூட்டும் ஒன்ரு?"

"இரண்டும் ஒரே கலர்தான். ஒரே மாதிரியான துணியாக யிருக்கலாம். ஜான்ஸனுக்கு அந்த ஸூட் மிக பெரியதாக யிருந்தது. பாஸோவுக்கு கொஞ்சம் பெரியதாக யிருந்தது" என்றுன் டாம்.

“பாஸோ மிக பருப்பமானவனா?”

“அவன் சரீரம் திடகாத்திரமாயிருந்தது. ஆனால் மிக பருப்பமென்று சொல்ல முடியாது. ஆனால் ஜான்ஸன் கொஞ்சம் மெலிந்தவனாக யிருந்தான்”

“வேறு ஏதாவது இருவருக்கும் ஒத்திருந்ததா?”

“கண்கள் ஒத்திருந்தன, இன்னும் ஏதோ சம்மந்த மிருப்ப தாக தோன்றுகிறதே தவிர எவ்வாறு எப்படி என்று என்னால் விபரிக்கமுடியவில்லை” என்றான் டாம்.

“டாம்! நீ இந்த ஜெயிலில் பாதுகாவலோடு யிருப்பது உனக்கு தான் நல்லது. நானே எப்படியும் விடுதலையடைவாய்” என்று சொல்லிவிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு இன்ஸ்பெக்டர் பவுட் ஸிடம் சென்றார்கள்.

“அதை யார் ஸ்டேஷனின் முன் போட்டாரென்று தெரிய வில்லை” என்றார் பவுட்ஸ்.

“தற்போது மணி ஒன்று. விடியற்காலை யென்பது 5 மணிக்கு. இன்னும் 4 மணி நேரம் உண்டு.” என்றார் ஷம்ஸ்.

“அவன் எழுதியபடி ஜேனைக் கொன்று விடுவானா? நீங்கள் அடிக்கடி சொல்வதுபோல், ஒருவன் ஒரு கொலை செய்த பின் மறுகொலை எத்தனையாயினும் அஞ்சமாட்டான்” என்றார் பவுட்ஸ்.

“ஆம்! அவன் எத்தனை கொலைகள் செய்தாலும் அவனை ஒரு முறைதானே தூக்கில் போடமுடியும். நாம் ஒத்துக் கொள் ளாவிட்டால், ஜேனும் இறப்பாள்” என்று ஷம்ஸ் சொன்னார்.

“அவர்களெழுதி யிருப்பதைக் கவனித்தால், அவர்கள் யாரென்றும் அவர்கள் செய்துள்ள வேலைகளெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்றும், அவர்கள் தற்போது மிருக்குமிடம் உங்களால் அறியமுடிய வில்லையென்றும் நினைக்கிறார்கள்” என் றார் பவுட்ஸ்.

“ஆம்! இங்கு போலீஸ் ஆட்களெல்லாம் வழமைபடி ஒழுங் காக தயாராயிருக்கிறார்களா?” என்று ஷம்ஸ் கேட்க, “தயார்” என்றார் பவுட்ஸ்.

“மேரி யிருக்கும் தெருவின் நேர்ந்து காருஸ்டேபின் இருக் கிறுனா?” என்று கேட்டார்.

“அவன் சற்று முன்புதான் வந்தான். பின்னால் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்” என்று சொல்லி அவனை கூப்பிட்

187021

டனுப்பினர் சில நிமிஷங்களுக்குள் அவன் வந்தான். அவனிடம் "மேரீ வீட்டில் யார் யாரிருக்கிறுர்கள் விபரமாகச்சொல்" என்று ஷம்ஸ் கேட்டார்.

"ஸ்டோன் ஒருவனிருந்தான். அவன் இறந்து விட்டான். மற்றபடியாக சிலர் வந்து தங்கி ஒன்றிரண்டு நாள் தங்கிபோய் விடு வார்கள்" என்ருன் ஶ்ரேந்து கான்ஸ்டேபிள்.

"பிரவ்ன் என்ருெருவனிக்கிருனே" என்று சோடே சொன்னுன்.

"அவன் ஒரு வியாபாரி ஒழுங்கானவன். அவனுக்கு காரும் உண்டு. அவன் அடிக்கடி ஏதோ விற்பனைக்காக சாம்பிள்கள் காரில் எடுத்து போவதுண்டு" என்ருன் கான்ஸ்டேபிள்.

"அவன் எவ்வாறு யிருப்பான்?" என்று ஷம்ஸ் கேட்க, "உயரமாக யிருப்பான். அவனை அடிக்கடி பார்த்ததில்லை. இரவில் தான் வருவான். அவன் இங்கு வந்து 3 மாதங்கள் ஆகின்றன" என்ருன்.

"அவன் கார் எப்படியிருக்கும்?" என்று ஷம்ஸ் கேட்க, "சுத்தமாக யிருக்கும் எப்பொழுதும். சில தினங்களுக்கு முன் பக்கத்து வீட்டிலிருந்து சில பையன்கள் அழுக்கு தண்ணீரை வெளியில் ஊற்றும் பொழுது தனது காரில் கொஞ்சம் சிதறி பட்டது என்று கோபமாக அச்சிறுவர்களை திட்டிக்கொண்டிருந் தார்" என்ருன் கான்ஸ்டேபிள்.

"எந்த சிறுவர்கள்?" என்று பவுட்ஸ் கேட்க, "பக்கத்து வீடு நீ 20 அது காலியாக யிருக்கிறது. அதைச் சில சிறுவர்கள் கழுவி சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்" என்ருன் கான்ஸ் டேபிள்.

"அது காலியா?" என்ருர் பவுட்ஸ் ஆச்சரியத்துடன்.

"ஆம்! இரண்டு மூன்று வாரங்களாக காலியாகத்தானிருக் கிறது" என்ருன் கான்ஸ்டேபிள்.

உடனே மேரீயுடன் பேசிக்கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டிலிருந்து எதையோ தட்டுவதுபோல் சப்தம் கேட்டது இன்ஸ்பெக்டர் பவுட்ஸுக்கு ஞாபகம் வந்தது. உடனே அவ் வீட்டைப் பார்க்க வேண்டுமென்று எண்ணினுர். இதை அறிந்த ஷம்ஸ் அவர் கையைப் பிடித்துக் கொண்டு "வேண்டாம் இப் பொழுது போனுல் ஜேனின் உயிருக்கு ஆபத்து" என்று சொல்லி வேண்டினுர்.

"சரி நீங்கள் சொல்வதால் சாவகாசமாய் பார்க்கலாம்" என்றார் பவுட்ஸ்.

அத்தியாயம் 23

மேரி வசிக்கும் தெருவு நிசப்தமாக யிருந்தது. தெருவில் விளக்குகள் எறிந்து கொண்டிருந்தன. ஆனால் ஜன நடமாட்டமே யில்லை. மேரியின் 21 நெ. வீட்டில், மெத்தையிலிருந்து ஒருவனும், கீழேயிருந்து ஒருவனும் தெருவை கவனித்தவாறிருந்தனர். வீட்டின் பின்புறத்தையும் ஒருவன் கவனித்துக் கொண்டிருந்தான். அங்கு மூதல் மாடியில் ஒரு அறையில் ஒரு நாற்காலியில் மேரி பயந்து நடுங்கி உட்கார்ந்திருந்தாள். எதிரே ஒருவன் நின்று கொண்டு "உனக்கு புத்தியே கிடையாது. நான், உன்னை என் இரகசியத்தில் சேர்த்தேனே!" என்று சொன்னான்.

"என்னால் கூடியவரை செய்தேன். அவர்களிடம் ஒன்றுமே சொல்லவில்லை. போலீஸ் வந்தபோது நான் பயந்து விட்டேன். அப்படி யிருந்தும் நான் ஒன்றும் சொல்லவில்லை" என்றாள் மேரி.

"அப்படியானால் அவர்களுக்கு எப்படி தெரிந்தது? ஷம்ஸ் மியூஸியத்திற்கு ஏன் போனான்? டவ்டன் பார்க்குக்கு ஏன் போனான்? மூட்டாளே! நீ சொல்லி விட்டாய். இன்னும் கொஞ்ச நாள் தள்ளி யிருந்தால், நாங்கள் தப்பித்துக் கொண்டு போயிருப்போம். தற்போது விஷயம் முற்றிவிட்டதே" என்றான்.

மேரியின் கண்களில் நீர்ததும்பியது. "பயப்படாதே போலீஸ் சற்று ஊதப்படும்" என்றாள் மேரி.

அவன் கடியாரத்தை பார்த்தான். "இன்னும் நேரமிருக்கிறது. ஆனால அந்த பெண்ணை இவ்விடத்தில் வைக்க வேண்டும். இனி அவள் அங்கிருக்க முடியாது. அவள் தப்பித்துக் கொண்டு ஓடி விட்டால் நமக்கு ஆபத்து" என்று சொல்லி அங்கிருந்து மேல் மாடிக்குப்போனான். அங்கு பிராடி என்பவன் தெருவைப் பார்த்தவாறு காவல் காத்துக்கொண்டிருந்தான்.

"பிராடி! அந்த பெண்ணை இங்கு கொண்டு வந்து விட வேண்டும்". என்றான்.

"சரி, ஜான்ஸன்! இந்த தெருவு நிசப்தமாக யிருக்கிறது. எனக்கு பிடிக்கவில்லை" என்றான் பிராடி.

"இத்தெருவை விட்டு வெளியில் போவது இன்னும் மோசமாக யிருக்கும்" என்றான் ஜான்ஸன்.

"நாம் இங்கிருப்பது அவர்களுக்கு தெரியுமா?" என்று பிராடி கேட்க, "தெரியலாம் ஏனென்றால் இதுவரை அவர்களும் சுறுசுறுப்பாகத் தானிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் அந்த ஷம்ஸ் என்பவன் தலையிடாமலிருந்தால், நாம் பயமில்லாமல் நமது வேலையை முடித்துக்கொண்டு போயிருக்கலாம். ஸ்டோன் மெத்தையிலிருந்து விழுந்ததும் வந்தான் ஷம்ஸ்" என்று ஜான்ஸன் கோபத்துடன் சொன்னான்.

"நாமிங்கு யிருப்பது அவனுக்கு தெரியுமென்று நினைக்கிறாயா?" என்று பிராடி கேட்க, "போதும். அந்த பெண்ணை கொண்டு வரலாம்வா" என்று கூப்பிட்டான். அவன் உடனே போய் ஒரு ஏணி எடுத்துவந்து சுவற்றினோரமாக போடவே ஜான்ஸன் ஏறினான். கூரையினருகே வந்ததும் கூரையை மேல் புறம் தள்ளினான் கதவைப் போல் திறந்தது. அவ்வழியே ஏறினான். பிராடி பின் தொடர்ந்தான். இருவரும் வீட்டின் மேல் தளத்திற்கு வந்து அங்கிருந்து பக்கத்து 20 கெ. வீட்டு தளத்துக்கு போனார்கள். அங்கு இவர் வந்த வழிபோல் ஒரு இரகசிய வழியிருந்தது. அந்த கதவை திறக்க, அங்கு முன்பே ஒரு ஏணி தயாராக வைக்கப்பட்டிருந்தது. அதன் வழியாக இருவரும் இறங்கினார்கள். அங்குள்ள அறையில் ஒரு கட்டிலின்மேல் ஜேன் படுத்துக்கொண்டிருந்தாள். அவளின் கைகால்கள் கட்டப்பட்டிருந்தன. வாயில் துணி வைத்து சப்தம் போடாதபடி கட்டப்பட்டிருந்தது. அவளை தூக்கிக் கொண்டு வந்த வழியாக மேரியின் வீட்டிற்கு வந்து 2-வது மாடியிலுள்ள அறையில் கட்டிலின் மேல் போட்டார்கள்.

"இவள் இங்கு யிருந்தால் நாம் சொல்லியபடி செய்ய சௌகரியமாகயிருக்கும்" என்றான் ஜான்ஸன். பிறகு "ஸிட்னி கீழ்மாடியிலிருந்து முன்புறம் கவனித்துக் கொண்டிருக்கிறான். பீடர் பின்புறத்தை கவனிக்கிறான். நாமெல்லோரும் ஒரே மாடியிலிருப்பது நலம்" என்று ஜான்ஸன் சொல்லி முதல்மாடிக்கு இறங்கினான். பிராடியும் கூடவே இறங்கினான்.

"இவளை சுட்டுவிட வேண்டுமோ?" என்று பிராடி கேட்க "அது கடைசி வேலை, நமக்கு வேறு வழியில்லாவிடில் செய்ய வேண்டியதுதான்" என்றான் ஜான்ஸன்.

"நமது கார் வந்துவிட்டால்?" என்று பிராடி கேட்க, "நமது கார் வந்து விட்டால், தப்பித்து ஓட வேண்டியது, நமது காருக்கு முன் போலீஸ் வந்து விட்டால் நான் முன் சொல்லியபடி செய்ய வேண்டியது" என்று ஜான்ஸன் சொல்லி அங்கிருந்து படிகளின் வழியாக கீழ்மாடியை நோக்கினான். அச்சமயத்தில் கீழே அவனைக் கூப்பிடும் சப்தம் கேட்டு "என்ன ஸிட்னி?" என்று கேட்டான்.

"ஒருவன் தெருவில் நடமாடுகிறான். போலீஸை சேர்ந்தவனைப்போல் தோன்றுகிறது" என்றான் ஸிட்னீ.

"அவன் போலீஸை சேர்ந்தவன்தான் எதற்காக உன்னை முன்னால் நிற்பாட்டி யிருக்கிறேன். அவனைக் கவனித்துக் கொண்டிரு" என்று ஜான்ஸன் சொன்னான்.

"நமக்கு கார்வந்துவிட்டால்நலம். இல்லாவிடில்போலீஸ் சங்கு ஊதப்பட வேண்டும், அல்லது போலீஸே வரவேண்டும். ஒன்றுமில்லாமல் சந்தேகமாக நாம் காத்துக் கொண்டிருப்பது, எனக்கு பயமாயிருக்கிறது" என்றான் பிராடி.

"பயப்படாதே, மனதை தைரியப்படுத்து" என்று ஜான்ஸன் சொல்லி, கீழ்மாடிக்கு போய், ஸிட்னீ, நீயும் மேலே வா. எல்லாரும் ஓரேயிடத்திலிருப்பது நல்லது. அந்த போலீஸ் என்ன செய்கிறான்?" என்று கேட்டான்.

"அவன் தெருவின் அந்த கோடியிலிருந்து இந்த கோடிவரை நடந்து, இப்புறம் ஒளிந்திருக்கிறான்" என்று சொல்லிக் கொண்டே ஸிட்னீயும் முதல் மாடிக்கு வந்தான். "நாம் எல்லோரும் பிரிந்து தனியாக ஓடி தப்பித்துக்கொள்வது உசிதமென்று நினைக்கிறேன்" என்றான் ஸிட்னீ.

"நீ ஓடினால், இங்கிருந்து எவ்வளவுதூரம் போக முடியும்? ஒரு போலீஸை வீட்டின் முன்பே பார்க்கிறோம். இத் தெருவின் இரு கோடியிலும் எத்தனை போலீஸ் உண்டென்பது நமக்குத் தெரியுமா? கார் இருந்தாலும் வேகமாக ஓட்டித் தப்பிக்க பிரயத்தனம் செய்யலாம்" என்றான் ஜான்ஸன்.

"ஸிட்னீ சொல்வது போல் தற்போது ஓடிப்போவது நலமென்று தோன்றுகிறது" என்றான் பிராடி.

"என்ன யோசனை! இப்பொழுது ஓடி தப்பித்துக் கொண்டாலும், கையில் ஒரு காசில்லாமல் என்ன செய்ய முடியும? நாம இதுவரை இவ்வளவு கஷ்டப்பட்டபின், அதன் பலனை யடையாமல் ஓடலாமா? " என்றான் ஜான்ஸன்.

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போது தெருவில் யாரோ கதவை தட்டும் சப்தம் கேட்டது. உடனே ஜான்ஸன் ஜேபியிலிருக்கும் கைத்துப்பாக்கியை பிடித்து தயாராகி, "ஜன்னல் வழியாக யாரென்று பார்" என்றான்.

ஸிட்னீ ஜன்னல் வழியாக பார்த்தான். "யாருமில்லையே" என்றான்.

"இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று ஜான்ஸன் சொல்லி பின் புறத்திலுள்ள பீடரிடம் போய் "உஷாராக கவனி. முன்புறம் யாரோ கதவை தட்டினுன்" என்ருன்.

"நானும் சப்தத்தைக் கேட்டேன். ஆனுல் இங்கு பின்புறம் நிசப்தமாக யிருக்கிறது. நானும் கவனித்தவாறிருக்கிறேன். நமது கார் வந்துவிட்டால் நலம்" என்ருன் பீடர். (தொடரும்)

பழப் பாயாசம்.

கோழி முட்டை 6, பால் ½ படி, அன்னுசிபழம் ½, திராக்ஷை ½ lb, மலைவாழைப் பழம் 6, சாத்துகுடி 2, ஆப்பிள் 2

முட்டைகளை உடைத்து வெள்ளை கருவை தனியாக எடுத்து வைக்கவும். மஞ்சள் கருவை பாலில் கலந்து நன்ருக அடித்து வேண்டிய அளவு சர்க்கரை போட்டு நன்ருக காய்த்து ஆறவைக்கவும். பழ தினுசுகளை சிறு சிறு துண்டுகளாக செய்து வைக்கவும். வெள்ளை கருவை முட்டை அடிக்கும் கருவியினுல் நன்ருக அடிக்கவும் நுறை கிளம்பும். அதில் எலுமிச்சம் பழம் ஒன்றின் சார் ஊற்றி கொஞ்சம் சர்க்கரை போட்டு மறுபடியும் அடிக்கவும்.

பாலும் மஞ்சள் கருவும் கலந்த பாத்திரத்தை ஐஸ் மேல் வைத்து குளிர வைக்கவும். ஒரு சிறிய கோப்பை எடுத்து அதில் பாதி அளவு பழம் போடவும். குளிர்ந்த பாலும் மஞ்சள் கருவு முள்ளதில், ¼ கோப்பை அளவு எடுத்து, கோப்பையில் போடவும். மீதம் ¼ கோப்பையில் வெள்ளை கருவின் நுரை எடுத்து மெதுவாக மேலுக்கு வைக்கவும். இவ்வாறு எத்தனை கோப்பை நிறைய வருகிறதோ அவ்வளவும் போடவும். சாப்பிடும்போது ஷெல் ஒரு கோப்பையை எடுத்து (ஸ்பூன்) கரண்டியால் கலக்கி சாப்பிடவும்.

விகடத் துண்டுகள்.

"உங்கள் கார் எனக்கு அடுத்த மாதம் 30ங் தேதிக்கு ஒரு நாளைக்குத் தேவை.

" சரி தருகிறேன். அடுத்த மாதம் 30ங் தேதி என்ன விசேஷம் ? "

"எனக்கு கலியாணமாகப் போகிறது அன்று"

"பெண் எங்கே?"

"இன்னும் பெண் பார்க்கவில்லை. ஆனால் உங்கள் கார் கொடுக்கிற விஷயம் முதலிலே தெரியனும்"

"எனக்கு ஸஹாராவிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அங்கு தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறதாம்"

"அங்கே எப்போதும் தண்ணீர் பஞ்சம் தான்"

"இந்த முறை அங்கு தண்ணீர் பஞ்சம் அதிகமாம். ஸ்டாம்பு ஒட்டகூட தண்ணீர் இல்லாததால் பின்களை கொண்டு ஸ்டாம்புகளை கடிதங்களில் ஒட்டுகிறார்களாம்"

ஒருவள் நாட்டுப்புறம் பக்கமாக காரை ஓட்டிக்கொண்டு போனாள். அங்கு இன்னொரு பெண் கார் ஒன்றை ஓட்டிக்கொண்டு வருவதை பார்த்தாள். அவள் ஓட்டிக் கொண்டு வருவதைப் பார்த்தால் அவளுக்கு கார் ஓட்டும் சட்டங்கள் ஒன்றும் தெரியாதது போல் தோன்றியது. ஆகையால் எப்படியாவது அவள் வண்டி தனது வண்டியில் மோதாமல் செய்ய எத்தனித்தாள். எனினும் அவள் இவளது வண்டியில் வந்து மோதிவிட்டாள்.

"நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என்று ஏன் ஸிக்னல் செய்துக் கொண்டு வரக்கூடாது"

"நான் என்ன செய்ய உத்தேசித்தேனோ அதற்கு ஸிக்னல் கிடையாது"

ஒரு ஸ்திரீ போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் தனது புருஷனைக் காணவில்லை என்று ரிபோர்ட் செய்தாள். அதில் தனது புருஷன் உயரமானவன் என்றும், சுருள்களைக் கொண்ட அழகான தலை மயிரையுடையவன் என்றும், நீல நிறக்கண்களை யுடையவன் என்

றும், எப்பொழுதும் வெகு நன்றாக ஆடைகளை அணிந்திருப்பார் என்றும் சொன்னாள்.

மறு நாள் அவள் சிநேகிதி ஒருத்தி அவளிடம், "உனது புருஷன் காணாமல் போன விஷயமாக படித்தேன். ஆனால் அவனுடைய வர்ணிப்பு ஏன் அப்படி கொடுத்தாய்? அவர் குள்ளமாகவும், அங்கு கொடுத்திருந்த வர்ணிப்புக்கு ஏறுக்கு மாறாகவே இருப்பார்?"

"அவர் ஏன் திரும்பி வரணும்?"

பொன் மொழி

நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்கு உங்கள் பவுண்டன் பேனாவை சற்று எழுத கடன் கொடுத்து அவர் எப்பொழுதாவது அதை கவனமறதியாக எடுத்துக் கொண்டுபோய் இருக்கிறாரா? சரி, இனி யாருக்காவது உங்கள் பேனாவை கடன் கொடுத்தால் அதன் மூடியை கழற்றி வைத்துக் கொண்டு கொடுக்கவும். அவர் நிச்சயமாக உங்கள் பேனாவை திருப்பி விடுவார்.

இஹ்யா உலூமுத்தீன்
மொழி பெயர்ப்பு.

(புதிய இரண்டாம் பதிப்பு.)

ஹுஜ்ஜதுல் இஸ்லாம் ஹஸரத் இமாம் கஸ்ஸாலி றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களால் இயற்றப்பட்ட மஹா அரிய நூலாகிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் கிதாபின் மொழி பெயர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கனவான்களுக்கு இது ஒரு சன்மானம். இது ருயல் 1-8 பேஜ் கொண்ட பெரிய ஸைஸில் 42 பாரம் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. இதன் விலை ரூ. 5

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

கைத்தொழில் சம்பாதனை வழிகள்.

யூனானி வைத்திய முறைகளை எழுதிய அய்யம்பேட்டை டி. அப்துல் ரஜாக் ஸாஹிப் அவர்களால் பலஉர்து புத்தகங்களிலிருந்து மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களுள் சில:—ஹேர் ஆயில்கள், ஊதுபத்தி, அச்சாபீஸ் மைகறை எடுத்தல், அச்சாபீஸ் கல் பிளவு பட்டால், அத்தரும் மற்ற வாசனை திரவியங்கள் தயாரித்தல், தைலங்கள் தயாரித்தல், எஸ்ஸென்ஸ்கள் தயாரித்தல், நிறங்கள் தயாரித்தல், டின்க்சர்களும் ஸ்பிரிட்களும் தயாரித்தல், ஆரஞ்சுதோல் எக்ஸ்டிராக்ட், ஆட்டுதோல் பதனிடுதல், இரும்பு பாலிஷ், இரும்பும் கல்லும் சேர்க்க சிமெண்ட், மைகறைகள் அப்புறப்படுத்தல், இருளில் புலப்படும் எழுத்துக்களுக்குரிய மை, இயந்திர சலூஷன், இங்கிலீஷ் சோப் செய்தல், உயர்ந்த வார்னிஷ், உடைந்த கண்ணாடியை ஒட்டும் சிமெண்ட், ரோம சங்காரி, ரோம சங்காரி சோப், உடைந்த கண்ணாடி மூலம் சம்பாதித்தல், உயர்ந்த கோந்துபசை, போமேட்கள் செய்தல், ஊறுகாய் நாள்பட கெடாதிருக்க, எழுதுவதற்கு சாக்பீஸ், எலுமிச்சம்பழம் கெடாதிருக்க, அதன் சாறு கெடாதிருக்க, ஐஸ்கிரீம் செய்தல், மரசாமான்கள் ஒட்டவைக்கும் சிமெண்ட், கெந்தக குவளை, கடுதாசி உறைகளை ஒட்டும் பசை, கஜூர் கொட்டையினால் பொத்தான்கள் செய்தல், இங்கிகள் செய்தல், கற்பூர கிளாஸ், கனிவர்க்கங்கள் கெடாதிருக்க.

கஸ்தூரி பில்லைகள், கஸ்தூரி எண்ணெய், காடி தயாரித்தல், காடியை வெள்ளை நிறமாக்க, காசுகட்டி செய்தல் காஸினி வர்ணம் செய்தல், கிளிஸரின் சோப் செய்தல், கில்ட்வேலை சம்பந்தமானவை, கொசு, மூட்டைபூச்சி ஆகியவைகளை கொல்ல, சர்க்கரையில் விளையாட்டு சாமான் செய்தல், சரக்குகளின் சத்து எடுத்தல், சாயத்தொழில், கண்ணாடிமீது சித்திரவேலை செய்தல், ரோமங்களை கறுப்பாக்குதல், செம்பை வெள்ளிநிறமாக்குதல், செம்பு வெள்ளிப் பாத்திரங்கள் மீது எழுத்து வரைதல், பாலிஷ்கள் செய்தல், டூத்பேஸ்ட் பவுடர் செய்தல், தங்கமுலாம், தயிர் உடனே தயாரித்தல், தியேட்டர் ஆக்டர்களுக்கு முகவஜிகா பவ்டர், தேன் தயாரித்தல், தேயிலை பில்லைகள், தோலை பதனிடுதல் சம்பந்தப்பட்டவைகள், சர்பத்துகள் தயாரித்தல், சீசாவாய்களை அடைத்தல், புழுபூச்சிகளை கொல்லும் பவுடர், பென்சில் தயாரித்தல், பெப்பர்மின்ட் தயாரித்தல், போலிசாமான்கள் தயாரித்தல், மெழுகினால் பூ தயாரித்தல், யானை தந்தத்தை வளைத்தல், ரப்பர் ஸீல் தயாரித்தல், தாச்சினுப்பொடி செய்தல், ஸீல் வைக்கும் அரக்கு.

இது 224 பக்கங்களைக் கொண்ட, பெதர்வைட் பேப்பரில் அச்சிட்டு கலிகோ பைண்ட் செய்த புத்தகம் விலை ரூபா. 2—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். 5

எங்களது பிரசுரங்களில் சில:—

கைத்தொழில் சம்பாதனை வழிகள்	2	8	0
இஸ்லத்து காச்சியுடைய கிஸ்ஸா	0	10	0
முரீது உபதேசம்	1	8	0
காஜா முயீனுத்தீன் சிஷ்தீ அஜ்மீரி (றலி) அவர்களின் ஜீவிய சரித்திரம்	0	8	0
ஹஸரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் சரிதை	0	10	0
ஹஸ்ரத் ஷெய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்	0	4	0
காலிகோரி கிஸ்ஸா	0	4	0
தீனுல் இஸ்லாம் ஷாபி மதுஹபுக்குரியது	0	6	0
யூனானி வைத்திய முறைகள்.	3	0	0
முதல்லல கோஷா நாமா	0	8	0
ஷை அறபுத் தமிழ்	0	12	0
முஹிம்மாதுஸ் ஸிப்யான் பீ மஸ்ஹபி ஹனீபதின் தர்ஜமான் தமிழ்	0	4	0
ஷை அறபுத் தமிழ்	0	4	0
அபூஷஹமா கிஸ்ஸாவும் சபன் தள்ளாங் கிஸ்ஸாவும் ஒரே புஸ்தகம்	0	5	0
ஷை அறபுத் தமிழ்	0	5	0
ஸப்உ ஸனாபில் (ஹனபி மதுஹபுக்குரியது)	3	0	0
மாஜிக் என்னும் ஜாலவித்தை	1	8	0
தர்த்தீபுஸ் ஸலாத் என்னும் தொழுகையடைவு ஹனபி	0	4	0
ஷை அறபுத் தமிழ்	0	8	0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.